ஆடவர், வனிதையர்
விரும்பும் அழகு
வண்ணப் புடைவைகளுக்கு
சிறந்த இடம்:
ச. லிங்கநாதன்
வண்ணச்சோலை
13, 14, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
(சி-513)

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

முகூர்த்தப்
பட்டுப் புடைவைகளை
தெரிவு செய்திட
இன்றே நாடுங்கள்
ச. லிங்கநாதன்
வண்ணச்சோலை
13, 14, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
[சி-513]

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 20 புதன்கிழமை (03 - 05 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 157

# யுத்த தந்திரோபாயங்களை மாற்ற அரசுத் தரப்பு திட்டம்!

## புலிகள் தொடர்ந்து வெல்வதை தடுப்பது குறித்து ஆலோசனை

கொழும்பு, மே. 3

மோதல் தவிர்ப்பு உடன்பாடு செயல் இழந்ததை அடுத்து, தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் பல்வேறு தாக்குதல்களில் வெற்றியீட்டி வருவதால் அதனை முறியடிப்பது குறித்து ஸ்ரீலங்கா பாதுகாப்பு உயர்பீடம் தீவிர ஆலோசனை நடத்தி வருகிறது.

யுத்த உத்திகளையும், தந்திரோபாயங்களையும் மாற்றி அமைப்பது குறித்தும் அரசுத் தரப்பினர் தீவிரமாக பரிசீலித்து வருவதாகவும் உயர்மட்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இராணுவத்தின் மூன்று விசேட பணிப்படைகள், இரண்டாவது டிவிஷன், விசேட படைப்பிரிவுகள் ஆகியன மேஜர் ஜெனரல் செனிவிரத்னவின் ஆணையின் கீழ் வைக்கப்படும்.

முழு யுத்தப் பிராந்தியத்துக்கும் கூட்டு மொத்தத் தளபதி ஒருவரின் நியமனம், குறைந்தது பத்தாயிரம் படையினரைப் புதிதாகச் சேர்த்தல், பெருமளவில் ஆயுதங்கள், குண்டு, வெடி மருந்துகள், மற்றும் பாதுகாப்புத் தளபாடங்களின் கொள்வனவு ஆகியன விரைவில் இடம்பெற உள்ளன.

தற்போது இராணுவத்தின் இரண்டாவது டிவிஸனின் பொது தளபதி அதிகாரியாகச் சேவை புரியும் மேஜர் ஜெனரல் ஏ. எம். யூ செனிவிரத்ன விரைவில் கூட்டு மொத்தத் தளபதியாக நியமிக்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இராணுவத்தின் நான்காவது மிக சிரேஷ்ட அதிகாரியின் தலைமை அலுவலகம்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கொழும்பில் மின் தடை! அதனால் அங்கு பதற்றம்

கொழும்பு, மே 3

நேற்று மாலை 6.30 மணியளவில் கொழும்பில் ஏற்பட்ட மின்சாரத் தடையை அடுத்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவே மின்சார விநியோகத்தில் தடை ஏற்பட்டதாகத் தெரிவித்த மின்சாரப் பகுதியின் பொது முகாமையாளர் கே. ஏ. ரணவீர வதந்திகளை நம்பவேண்டாம் என்று கேட்டுள்ளார். (ஒ-4)

## பண்டாரவளையில் தமிழ்ப் பெண் கைது

கொழும்பு. மே.3

பண்டாரவளையில் இ. தொ. காவின் மேதினக் கூட்டத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிசார் இராணுவத்தினரின் நான்கு சீருடைகளை பை ஒன்றில் வைத்திருந்த— சிவகாமி என்ற பெயருடைய— தமிழ்ப் பெண்ணைக் கைது செய்ததாக அறிவிக்கப்படுகின்றது.

(உ 6)

மட்டு. உறுகாமத்தில்

## "பவள்" கவச வாகனம் கண்ணியில் தகர்ந்தது

மட்டக்களப்பு, மே 3

மட்டக்களப்பில் உறுகாமம் பகுதியில் நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணி வெடித் தாக்குதலில் பவள் கவச வாகனம் ஒன்று தகர்க்கப் பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து தெரியவரவில்லை. (ஒ)

## ஏறாவூர்ப் பொலீஸ் மீது புலிகள் துப்பாக்கிச் சூடு

### பொலீஸ்காரர் உயிரிழப்பு

கொழும்பு, மே. 3

மட்டக்களப்பு ஏறாவூர் பொலீஸ் நிலையத்தின் மீது விடுதலைப் புலிகள் நேற்று மாலை 4.30 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டபோது ஒரு பொலீஸார் கொல்லப்பட்டார் மற்றும் ஒருவர் காயமடைந்தார்.

பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை தலைமைச் செயலகம் இதனை அறிவித்திருக்கிறது. (ஒ-4)

மட்டக்களப்பில் தேடுதல்:

## இளைஞனும் மாணவனும் படையினரின் சூட்டுக்கு பலி

கொழும்பு, மே 3

நேற்றுக் காலையில் மட்டக்களப்பின் ஒரு பகுதியை தனிமைப்படுத்தி அங்கு பொலீஸார் தேடுதல் வேட்டை நடத்தினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மட்டக்களப்பு வடக்கில் தமது வீட்டில் இருந்த நிராயுத பாணியான இளைஞன் ஒருவரை பொலீஸார் வீட்டுக்குள் வைத்தே சுட்டுக் கொன்றிருக்கிறார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் கூறியுள்ளார்.

தேடுதல் முடிந்து திரும்பிக் கொண்டிருந்த பொலீஸார் சைக்கிளில் அவர்களைக் கடந்து சென்ற பாடசாலை மாணவன் ஒருவரை சுட்டுக் கொன்றதாகவும் தெரிவிக்கப் பட்டது. [ஒ-4]

புலிகளுடன் பேச்சு நடத்த

## தொண்டா மீண்டும் யாழ். வர முயற்சி!

கொழும்பு, மே 3

சுயாதீனமான — தனிப்பட்ட — மத்தியஸ்தர் என்ற வகையில் தான் யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு அமைச்சர் தொண்டமான் விரும்புவதாகவும் —

இதற்கான அனுமதியை ஜனாதிபதி சந்திரிகாவிடம் கோரியிருப்பதாகவும் கொழும்புச்செய்திகள் தெரிவிக்கின்றன.

பாரிஸ் மாநாட்டுக்கு ஜனாதிபதி புறப்படுவதற்கு முன்னர் அவரைச் சந்தித்து இதற்கான அனுமதியைத் தொண்டமான் கோரியதாகவும் —

எதிர்வரும் 7 ஆம் திகதி இந்தியா செல்லவிருக்கும் தொண்டமான் அதற்கு முன்



னர் அவசரமாக யாழ்ப்பாணம் செல்வாரா என்பது தெரியவில்லை என்றும் —

கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

அரசாங்கத்தின் பிரதிநிதியாகவோ அல்லது கட்சிப் பிரதிநிதியாகவோ தான் யாழ்ப்பாணம் செல்ல விரும்பவில்லை என்றும் —

தனிப்பட்ட முறையிலேயே தாம் யாழ்ப்பாணம் செல்ல விரும்புவதாகவும் —

தொண்டமான் வலியுறுத்தியுள்ளதாகவும் அச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது. (உ)

## இரண்டு ஏவுகணைகள் அவ்ரோவைத் தாக்கின?

கொழும்பு, மே 3

கடந்த சனியன்று விடுதலைப்புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட இரண்டாவது அவ்ரோவிமானத்தின் விமானியான விங் கொமாண்டர் பத்திரான, விமானம் விழுந்து நொருங்குவதற்கு முன்னர் —

தங்களது விமானம் இரண்டு ஏவுகணைகளினால் தாக்கப்பட்டிருப்பதாக பலாலி விமானக் கட்டுபாட்டுத்தளத்துக்கு அறிவித்திருந்தார் என்று ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. (உ)

அவ்ரோ தாக்கப்பட்ட வேளை

## விமானப் படைத தளபதி பலாலிக்கு வரவிருந்தார்

கொழும்பு, மே 3

கடந்த சனியன்று காலையில் விமானப் படைத் தளபதி ஏயர் மார்ஷல் ஒலிவர் ரணசிங்காவும் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் குழு ஒன்றும் இரத்மலானையிலிருந்து பலாலி நோக்கி விமானம் ஒன்றில் புறப்படவிருந்த சமயமே இரண்டாவது அவ்ரோ விமானம் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக "த ஐலண்ட்" ஆங்கிலப் பத்திரிகை தகவல் வெளியிட்டது.

இரண்டாவது விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது பற்றிய தகவல் இரத்மலானை விமான நிலையத்தில் வைத்தே விமானப் படைத் தளபதியிடம் தெரிவிக்கப்பட்டது என்றும்—

அதையடுத்து பலாலிக்கு விமானத்தில் செல்வதற்கான தனது பயணத்தை விமானப் படைத் தளபதி ரத்துச் செய்தார் என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

(உ-7)

## விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போராடுவதற்கு சந்திரிகாவுக்கு இந்தியா உதவ வேண்டும்

### "ரைம்ஸ் ஒவ் இந்தியா" தலையங்கம்

புதுடில்லி, மே 3

இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்குத் தேவையான உதவிகள் அனைத்தையும் இந்தியா வழங்கவேண்டும்.

இவ்வாறு இந்தியாவின் செல்வாக்கு மிக்க பத்திரிகையான 'ரைம்ஸ் ஒப் இந்தியா' இந்திய அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

அப்பத்திரிகை நேற்று எழுதியுள்ள ஆசிரியர் தலையங்கத்தில் இந்திய அதிகாரிகளை இலங்கையில் கடமையில் ஈடுபடுத்தும் தவறை மீண்டும் தமது நாடு செய்யக்கூடாது என்று தெரிவித்துள்ளது.

ஆனால் இலங்கை அரசாங்கத்திற்கு பொருள் உதவி ஏனைய உதவிகளை அளிப்பதில் இந்தியா பின்னிற்கக் கூடாது என்று குறிப்பிட்டிருக்கிறது.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## நரோமா சேவை இன்று நடக்கும்

யாழ்ப்பாணம், மே3

இன்று புதன்கிழமை 'நரோமா' கப்பலில் பயணம் மேற்கொள்ள விருப்பவர்கள் காலை 8 மணிக்கு பருத்தித்துறை இறங்கு துறைக்கு சமுகமளிக்குமாறு யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுள்ளார், (ஒ—4)

## யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் 8 பேர் புறக்கோட்டையில் கைது

கொழும்பு, மே 3

நேற்று முன் தினம் — மே தினத்தன்று— கொழும்பு புறக்கோட்டை பஸ் நிலையப் பகுதியில் சந்தேகத்துக்குரிய வகையில் நடமாடியதாகக் கூறப்படும் 8 தமிழ் இளைஞர், யுவதிகளை புறக்கோட்டைப் பொலீஸாரின் விசேட குழுவினர் கைது செய்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இவர்கள் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த எண்மரில் ஐவர் பெண்கள் ஆவர்.

பேராதனைப் பல்கலைக்கழகப் பரீட்சைக்குத் தோற்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## இந்தியாவிடம் இராணுவ உதவியை ஜனாதிபதி சந்திரிகா கேட்டாரா?

### தகவல் ஏதும் வெளியாகவில்லை

புதுடில்லி, மே. 3

நேற்று ஆரம்பமான சார்க் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக புதுடில்லி சென்றிருந்த ஜனாதிபதி சந்திரிகா அங்கு பிரதமர் நரசிம்மராவுடனும் ஏனைய தலைவர்களுடனும் தனித்தனியாகப் பேச்சு நடத்தினார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் தமது நாட்டுக்கு உதவும்படி இந்தியாவிடமும் ஏனைய அயல் நாடுகளிடமும் ஜனாதிபதி சந்திரிகா கோருவார் என எதிர்பார்க்கப்பட்ட போதும் —

நேற்றைய சந்திப்புக்கள், பேச்சுவார்த்தைகளின் போது அத்தகைய கோரிக்கைகளை அவர் விடுத்தாரா என்பதை உர்ஜிதப்படுத்த முடியவில்லை.

"சார்க்" தலைவர்கள் இன்று சிம்லாவில் கூடிப் பேசவுள்ளனர் எனினும் ஜனாதிபதி சந்திரிகா விடுதலைப் புலிகளின் தாக்குதல்களை

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஆயர் கென்னத் சொல்கிறார்:

## முடிவை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கத் தரப்பில் தாமதம்

### பேச்சு முறிய அடிப்படைக் காரணம் அதுவே

கொழும்பு, மே 3

அரசாங்கத்துக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையில் —

அரசாங்கத் தரப்பில் தீர்மானத்திற்கும் [illegible] கும் இடையில் தாமதம் நிலவியது.

இதுவே பேச்சுவார்த்தை முறிந்து போனதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது எனலாம்.

இவ்வாறு அங்கிலிக்கன் ஆயர் அதிவண. கென்னத் பெர்னாண்டோ "சண்டே [illegible]" [illegible] பேட்டி ஒன்றில் தெரிவித்திருந்தார்.

தங்கள் கோரிக்கைகள் எல்லாவற்றையும் நிறைவேற்றுவதில் அரசாங்கம் எதிர்நோக்கும் கஷ்டங்களை அவர்கள் புரிந்துகொள்ளத் தவறியதும் பேச்சுவார்த்தை முறிந்து போனதற்கு ஒரு [illegible] — என்றும் ஆயர் தமது பேட்டியில் கூறினார்.

விடுதலைப் புலிகள் தவறு

[6ஆம் பக்கம் பார்க்க]

ஸ்ரீலங்கா அரசுக்கு

## யுதத ஆலோசனை வழங்க அமெரிக்க குழு விஜயம்

கொழும்பு, மே. 3

ஸ்ரீலங்கா அரசுக்கு யுத்த ஆலோசனை மற்றும் புதிய யுத்த நடைமுறைத் திட்டத்தை வரைய அமெரிக்காவின் விஷேட யுத்தப்பிரிவின் அங்கத்தவர் குழு ஒன்று கொழும்பு வந்துள்ளது.

அரசின் வேண்டுகோளுக்கு அமைய இந்தக் குழு வந்துள்ளதாக "லங்கா தீப" சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் யுத்த அசைவுகள் தொடர்பாக அவதானித்து புதிய பாதுகாப்பு செயல் திட்டத்தை தயாரித்து அதனை ஜனாதிபதியிடம் இலங்கை வந்துள்ள அமெரிக்க விஷேட யுத்தக் குழு பிரிவு சமர்ப்பிக்கும் என "லங்கா தீப" மேலும் தெரிவித்துள்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மன்னாரில் இரவு வேளை ஊரடங்கு

கொழும்பு, மே 3

மன்னார் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் இரவு நேர ஊரடங்கு உத்தரவை ஸ்ரீலங்காப் படையினர் பிறப்பித்துள்ளனர். இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது [உ-6]

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின்

## மே தினக் கூட்டததில சமாதான கோஷங்கள்!

கொழும்பு, மே. 3

கொழும்பு நகரசபைத் திடலில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மேதினக் கூட்டத்தில் சமாதானத்தை வலியுறுத்தும் கோஷங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தன.

கூட்டமேடையின் நாலாபுறமும் சமாதானக் கோஷங்கள் தாங்கிய பதாகைகளும் சுவரொட்டிகளும் தொங்கவிடப்பட்டிருந்தன.

"வடக்கில் எரியும் தீச்சுவாலையை அணைப்போம்"! "சமாதானப் பூ மலரட்டும்" போன்ற சுலோகங்கள் ஆங்காங்கே காணப்பட்டன. (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்கடைத் திறப்புவிழா

சித்திரைத் திங்கள் 20ஆம் நாள் (03-05-1995) இன்று புதன்கிழமை முற்பகல் 9.05 மணி முதல் 10.00 மணி வரையுள்ள சுபவேளையில்

## மருந்து-பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது
## DRUGS & MILK FOODS (PVT) LTD.

என்னும் மொத்த விற்பனைவு நிலையத்தினை 208, கேணல் கிட்டுசாலையில் ஆரம்பிக்கவுள்ளோம் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். ★

**மருந்து - பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது,**
**DRUGS & MILK FOODS (PVT) LTD.**
484, கேணல் கிட்டு சாலை, யாழ்ப்பாணம்.

*மொத்த விற்பனைவு நிலையத் திறப்புவிழாவினை வாழ்த்திநிற்கும் எமது சகோதர நிறுவனங்கள்:*

- மருந்து – பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது, *பிரதான வீதி, சித்தன்கேணி.*
- மருந்து – பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது, *சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை.*
- மருந்து – பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது, *ஊறணி, வல்வெட்டித்துறை.*
- மருந்து – பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது, *யாழ். வீதி, கிளிநொச்சி.*
- மருந்து – பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது, *முருங்கன் சந்தி, மன்னார்.*

**மற்றும் சேவை நலன் நிறுவனங்களாகிய**

**வில்லியம் ஹாவே தனி. மருத்துவமனை,**
கண்டி வீதி, கண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

**பற்சிகிச்சை நிலையமும்-**
**வைத்திய ஆலோசனைகளும்**
மேல்மாடி, 484, கேணல் கிட்டு சாலை,
யாழ்ப்பாணம்.

(சி/1137)

---

கொய்யாத்தோட்டம்
ஸ்ரீ ஞான செல்வ விநாயகப் பெருமான்
ஆலய
மண்டலாபிஷேக

## பூர்த்திவிழா விஞ்ஞாபனம்

நிகழும் சித்திரை 20ஆம் நாள்
இன்று (03 — 05 — 1995) புதன்கிழமை
ஸ்ரீ ஞான செல்வ விநாயகப் பெருமானுக்கு நவாதிக
சகஸ்ர சங்காபிஷேகம் (1009)
பகல் 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

சங்காபிஷேக பிரதமகுரு —
சிவஸ்ரீ இ. சூரியப்பிரபாகரக் குருக்கள்
(கும்புளாவளைப் பிள்ளையார் கோயில், அளவெட்டி)

பிரதம அர்ச்சகர் —
பிரம்மஸ்ரீ பா. சர்வேஸ்வரசர்மா

உதவி அர்ச்சகர் —
பிரம்மஸ்ரீ க. கேசவசர்மா

அன்று மாலை விசேஷ அலங்காரங்களுடன் பூசை நடைபெற்று எம்பெருமான் தெருவீதி உலா வந்து அருட்காட்சி நல்குவார்.

04 — 05 — 1995 வியாழன் பகல் மகேஸ்வர பூசையும், இரவு பைரவ சாந்தி உற்சவமும், தொடர்ந்து இன்னிசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

★ அடியார்கள் அனைவரும் பங்கு கொண்டு அருள் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகிறோம்.

இங்ஙனம்
அருள் நாடும்
ஆலய பரிபாலன சபை
(கொய்யாத்தோட்டம்)

(36492)

---

## குருபரன் கல்வி நிறுவனம்

புத்தூர்

**O/L DAY CLASS**

ஆரம்பம்: நாளை **04-05-95**
வியாழன் காலை 8-30 மணி

- ★ திறமை மிக்க ஆசிரியர்களினால் போதிக்கப்படுகிறது.
- ★ கடந்த கால வினா-விடை வகுப்புகளும் நடைபெறும்.

(35497)

---

தமிழ் & ஆங்கிலம்
**தட்டச்சும் சுருக்கெழுத்தும்**
புதிய வகுப்புக்கள்
ஆரம்பம்: 05 - 05 - 1995

*விவரங்களுக்கு:*

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, ST PETER'S LANE,
JAFFNA.

[சி-1132]

---

## பொருளியல் மாணவர்களுக்கு ஓர் முக்கிய அறிவித்தல்

**A/L - 97**

எனது வகுப்புக்கள் பின்வரும் இடங்களிலேயே நடைபெறும்.

**C. C. A.** யாழ்ப்பாணம். — நிரு கோண்டாவில்.

குறிப்பிட்ட சில பிரிவுகள் மட்டுமே ஆரம்பிப்பேன் என்பதால் உங்கள் அனுமதியை உறுதிப்படுத்துங்கள்.

பொருளியல்: திரு. உதயன்

(சி-1097)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி

**அப்பாக்குட்டி கந்தையா**

மட்டுவில் தெற்கில் வசிக்கும் மட்டுவில் மத்தி கிராம அலுவலராக பணிபுரியும்
திரு. க. வாமதேவன்
அவர்களின்
அன்புத் தந்தையாரான
பூநகரி, தம்பிராயை வசிப்பிடமாகக் கொண்ட
அமரர் அப்பாக்குட்டி கந்தையா
அவர்கள்

03 - 04 -1995 ஆம் திகதி இறைவனடி சேர்ந்தமையிட்டு எமது அஞ்சலியை அன்னாரின் குடும்பத்திற்கு தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை நாம் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலக
ஊழியர் நலன்புரிச் சங்கம்.

பிரதேச செயலகம்,
தென்மராட்சி, சாவகச்சேரி.

(சி-1134)

---

## ஆலயங்களில்

தென்புலோலி சந்தாதோட்டம் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் கட்டி முடிக்கப்பட்ட மணிக்கூட்டுக் கோபுரத்தில் மணி ஏற்றும் வைபவம் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மூலமூர்த்திக்கு விசேட அபிஷேகபூசையும், பிரார்த்தனையும் தூபி அபிஷேகமும், காண்டாமணி ஒலித்தல் வைபவமும் இடம்பெறும்.

(173)

## வசந்தராஜா பதவியிலிருந்து நீக்கப்படுவார்?

கொழும்பு, மே3

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் வசந்தராஜா அப்பதவியில் இருந்து நீக்கப்படக்கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அந்தப் பதவிக்குத் தகுதியான புதியவர் ஒருவரைக் கண்டறியுமாறு, ஜனாதிபதி சந்திரிகா பொதுசனத் தொடர்புத்துறை அமைச்சர் தர்மஸ்ரீ சேனநாயக்காவைக் கேட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை விடுதலைப் புலிகளுடன் தொடர்புவைத்துள்ளவர்களாகக் கூறப்படும் பத்திரிகையாளர்கள் மற்றும் பொதுசனத் தொடர்புத்துறையாளர்கள் குறித்து புலனாய்வுப்பகுதி அரசாங்கத்துக்கு அறிக்கை சமர்ப்பித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

[அ]

## தாவரவியல் பரீட்சை

யாழ்ப்பாணம், மே3

அமரர் வ. சின்னத்தம்பிஞாபகார்த்தப் பரிசிலுக்கான தாவரவியல் போட்டிப் பரீட்சைத் தொடரில் ஒன்பதாவது பரீட்சை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப நான்கு மணிக்கு நடைபெறும்.

இப்பரீட்சையாழ்.மாவட்டம் முழுவதிலும் எற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையங்களில் நடைபெறும் என அமைப்பாளர்கள் அறிவித்துள்ளனர். (அ—15)

---

தெல்லிப்பழை கிறாஸ்கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழக ஆதரவில் மகாஜனக் கல்லூரி சதுரங்கக் கழகம் பாடசாலை மாணவ குழுக்களுக்கு இடையே நடத்தும்

## சதுரங்கச் சுற்றுப்போட்டி

- ★ மூவர் கொண்ட குழுக்களாக நடைபெறும்
- ★ நான்கு பிரிவுகளாக நடத்தப்படும்

1) 15 வயதுக்கு கீழ்ப்பட்ட ஆண், பெண்
2) 15 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண்

விண்ணப்பிக்க விரும்பும் பாடசாலைகள் பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பத்தை 10-5-1995க்கு முன்னர் மகாஜனக் கல்லூரி சதுரங்கக் கழகத்திடம் சேர்க்கவும்.

(8341)

---

## ஆத்ம அஞ்சலிகள்

ஆசிரியர் அந்தோனி தாவீது [டேவிட்]
[SP, Tri Com Tri Jom]

தோற்றம் 13-01-936 — மறைவு 02-05-1995

எங்கள் கல்வி நிலையத்தில் 15 வருடங்களாக வர்த்தக பாட அறிவொளி பரப்பி வந்த மணி விளக்கே! மாண் குணங்கள் வாய்ந்த குருவே!

எங்கள் குறைந்தவம் தங்களை இப்படிச் சடுதியில் பிரிந்து அதிர்ந்து கலங்க வைத்து விட்டது.

ஐயா உங்கள் உபதேச வார்த்தைகள் அருமருந்த ஒளி வதனம். எங்கள் மனக்கண்களில் தோன்றி நின்று-இன்று வருத்தினும் நாளை நல்வழியில் நடத்தும். எங்கள் கண்ணீர் மலர்களால் உங்கள் பாதங்களை பூசித்து வழியனுப்பி விம்மி நிற்கின்றோம். உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகி
ஆசிரியர்கள், மாணவர்கள்
பழைய மாணவர்கள்

கருணை,
கல்வி நிலையம்,
சுன்னாகம்.

குறிப்பு: நிலைய அனைத்து மாணவர்கள் பழைய மாணவர்களும் காலை 8.00 மணிக்கு நிலையத்துக்குச் சமுகமளிக்கவும்

(8342)

---

## பின்போடப்பட்டுள்ளது

சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்கா சுன்னாகம் அபிவிருத்திக் குழுவினரால் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் உதைபந்தாட்டப் போட்டிகள் யாவும் இன்றிலிருந்து (3 - 5 - 95) மறு அறிவித்தல் வரை தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை சகல விளையாட்டுக் கழகங்களுக்கும் அறியத்தருகிறோம்.

அபிவிருத்திக் குழு

(8340)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டின் பல பகுதிகளிலும் படையினர் ஷெல் தாக்குதல்கள்

## சுன்னாகத்தில் ஒருவர் அதிர்ச்சியால் மரணம்

யாழ்ப்பாணம், மே 3

திங்கள் இரவு படையினர் குடாநாட்டின் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி பரவலாக ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

பொன்னாலை, அராலி, சித்தன்கேணி, கலைநகர், சங்கானை, உரும்பிராய், புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம் ஆகிய இடங்களில் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

சுன்னாகத்தில் ஷெல் அதிர்ச்சி காரணமாக ஒருவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு மரணம் சம்பவித்தது

சுன்னாகம் தெற்கில் இரண்டு ஷெல்கள் வாழைத் தோட்டத்தில் விழுந்து வெடித்தன. மற்றைய ஷெல் வீட்டு வளவொன்றில் விழுந்து வெடித்தது.

வாழைத் தோட்டத்தில் விழுந்த ஷெல்லினால் வாழை மரங்கள் சேதமடைந்தன.

வீட்டு வளவில் விழுந்த ஷெல்லினால் தென்னை, பலா மரங்களும் மாட்டுக் கொட்டில் ஒன்றும் சேதமடைந்தன.

சுன்னாகம் மேற்குப் பகுதியில் விழுந்த ஷெல் சுன்னாகம் மத்திய சந்தைப் பகுதியில் விழுந்து வெடித்தது

இதனால் மருந்தகம் ஒன்று சேதமடைந்தது,

மற்றைய ஷெல் தோட்டப் பகுதியில் விழுந்து வெடித்தது. அருகில் தேவாலயம் ஒன்றில் தஞ்சமடைந்திருந்த டேவிட் மாஸ்ரர் (வயது 65) என்பவர் ஷெல் அதிர்ச்சியால் மாரடைப்புக்கு உள்ளானார். ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரும் வழியில் அவர் மரணமானார்.

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை தேவஸ்தானத்தில் திருக்கல்யாண வைபவம் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் சிறிது தூரத்தில் உள்ள வாழைத்தோட்டத்தில் ஷெல் விழுந்தது. இதனால் பக்தர்கள் சிதறி ஓடினர். பின்னர் திருவிழா சிறப்பாக நிறைவேறியது.

திங்கள் இரவு சித்தன்கேணி, கலைநகர், சங்கானைப் பகுதிகளில் விழுந்த ஷெல்களால் சில வீடுகள் சேதமுற்றன.

மக்கள் இரவு முழுவதும் ஆலயங்களில் கழித்தனர்.

சங்கானையில் வயல்வெளிகளில் ஷெல் விழுந்ததால் சேதங்கள் ஏற்படவில்லை.

(இ-14-15-175-89)

## 10 ஆவது தொடர் வறுமை நிவாரண உணவு முத்திரை

### விரைவில் வழங்கப்படும்

வலிகாமம் மேற்கு, மே 3

9 ஆவது தொடர் வறுமை நிவாரண உணவு முத்திரையுள்ள குடும்பங்களுக்கு 10 ஆவது தொடர் வறுமை நிவாரண உணவு முத்திரைகளை வழங்குவதற்கு வறுமை நிவாரண ஆணையாளர் பீ கே. குணவர்த்தனா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக வறுமை நிவாரண ஆணையாளர் சகல பிரதேச செயலாளர்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி உள்ளார்.

10 ஆவது தொடர் வறுமை நிவாரண உணவு முத்திரைகள் மிக விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் — இது 9 ஆவது தொடர் வறுமை நிவாரண உணவு முத்திரையின் பெறுமதியை ஒத்தது என்றும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஏப்ரல், மே ஆகியஇரண்டுமாதங்களுக்கும் உரிய 1ஆம் 2ஆம் புள்ளிகள் மட்டுமே தற்போதைக்கு செல்லுபடியாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

10 ஆவது தொடர் வறுமை நிவாரண உணவுமுத்திரைகளை அரச அரசகூட்டுத்தாபனங்களில் நியமனம் கிடைத்த குடும்பத்தலைவர் உள்ள குடும்பங்களுக்கும் — வெளிநாடுகளில் வேலை பெற்று வருமானம் பெறும் குடும்பத் தலைவர்கள் உள்ள குடும்பங்களுக்கும்— வழங்க வேண்டாமெனவும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ-175)

## நடமாடும் கால்நடை வைத்தியசேவை

வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய அதிகாரி தமது பிரிவில் உள்ள சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் ஒவ்வொரு மையத்தில் மாதாந்தம் ஒருநாள் அல்லது இரண்டு நாள்களுக்கு உத்தியோகத்தர்களுடன் சென்று சேவையாற்ற நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

இந்த நடமாடும் சேவையின் கீழ் முதலாவது மையம் வெகு விரைவில் அராலி மத்தி கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள கிராமோலைக் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

(க-5-12)

## கொழும்பு நோக்கி வந்த 'பஸ்ஸில் ஜெலிக்நைற்'

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த பஸ் ஒன்றில் இருந்து சுமார் 3 கிலோ கிராம் நிறையை உடைய ஜெலிக்நைற் ரக வெடிகுண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு வந்து கொண்டிருந்த வேளை, இந்த பஸ் குருநாகல் பிரதேசத்தில் வைத்து வழி மறிக்கப்பட்டது.

இவ்வாறு வழி மறித்து பஸ்ஸை சோதனையிட்ட போதே அதனுள்குண்டு ஒன்று இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

(ஈ-5)

## தடா சட்டத்தை மாற்ற ராவ் தலைமையில் மாநாடு

புதுடில்லி, மே 3

தடா சட்டத்தில் மாற்றங்களை கொண்டு வருவது தொடர்பாக மாநில முதலமைச்சர்களின் மாநாடு ஒன்றை இந்தியப் பிரதமர் நடத்தவுள்ளார்.

மே மாதம் 5 ஆம் திகதி புதுடில்லியில் இம்மாநாடு இடம்பெறும்.

தகுந்த ஆலோசனைகளின் பின் தடா சட்டம் திருத்தி அமைக்கப்படும் என முன்னர் பிரதமர் ராவ் தெரிவித்து இருந்தார்.

(இ-14)

## சுங்கத் தீர்வை இன்றி பொருள் கடத்த முயற்சி

### துறைமுகப் பகுதியினர் கைப்பற்றினர்

கொழும்பு, மே 3

மத்திய கிழக்கில் தொழில் புரிந்து விட்டு நாடு திரும்புபவர்களுக்குச் சொந்தமான பொருள்கள் எனக்கூறி, சுங்கத் தீர்வை செலுத்தாமல் கடத்தப்பட இருந்த சுமார் ஒன்றரைக்கோடி பெறுமதியான பொருள்களை துறைமுக சுங்கப்பகுதியினர் கைப்பற்றினர்.

கொழும்பு துறைமுகத்தில் கப்பல் ஒன்றில் இருந்து இறக்கப்பட்ட கொள்கலன்களை சோதனையிட்ட போதே மேற்படி மோசடி கண்டு பிடிக்கப்பட்டது.

குறிப்பிட்ட கொள்கலன் ஒன்றில் இருந்து சட்ட விரோதமாக கொண்டு வரப்பட்ட சிகரெட்டுகள், பனியன்கள், கூரை விசிறிகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டன.

இக்கொள்கலன் டுபாய் நாட்டிலிருந்து கொழும்புக்கு அனுப்பப்பட்டிருந்தது.

## கைதடி, சாவகச்சேரியில் கிராமங்கள் புனரமைப்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிராம எழுச்சி உதயத் திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பகுதியில் கைதடி இராசபுரி கிராமமும், சாவகச்சேரி நகுலன் குடியிருப்பும் புனரமைக்கப்படவுள்ளன.

கைதடி இராசபுரிக் கிராமத்தில் உள்ள நாற்பது வீடுகளில் பத்து வீடுகள் புதிதாக அமைத்தும் ஏனைய வீடுகள் புனரமைத்தும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் இப்பகுதியில் குழாய்க் கிணறு, மலசூடங்கள், அறிவாலயம், ஆகியனவும் அமைக்கப்படவுள்ளன.

(இ-117)

## லங்கா சிமெந்து ஊழியருக்கு சம்பள உயர்வு இல்லை

லங்கா சிமெந்து லிமிடெட் ஊழியர்கள், உத்தியோகத்தர்களுக்கு புதிய சம்பளத் திட்டம் அமுலுக்கு வந்தும், காங்கேசன்துறை லங்கா சிமெந்து வடபகுதி ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

1994 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் இச்சம்பள உயர்வுத் திட்டம் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது.

கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் கடமை புரியும் ஊழியர் உத்தியோகத்தர் சம்பள உயர்வு அமுலுக்கு வந்த காலத்தில் இருந்தே அதனைப் பெற்று வருகின்றனர்.

இது பற்றி முகாமையாளருடன் தொடர்பு கொண்ட போது அந்தச் சம்பள உயர்வு உங்களுக்கல்ல என அறிவிக்கப்பட்டதாம்.

(இ-15)

# மக்களின் பிரச்சினையில் அரசு கவனம் செலுத்தாது பேச்சுவார்த்தை மூலம் பிரசாரம் செய்ய முனைந்தது

## இதனாலேயே புலிகள் காலக்கெடு விதிக்க நேரிட்டது

*யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட மைதானத்தில் நேற்று முன்தினம நடைபெற்ற மேதின விழாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு சு. ப. தமிழ்ச்செல்வன் ஆற்றிய உரையின் தொகுப்பு*

உழைக்கும் மக்களின் தொழிலாளர் தினம் மே தினம் இத்தினமானது இங்கு வாழுகின்ற அனைவரதும் நாள்.

மக்களுக்காக அயராது உழைக்கும் போராளிகளின் நாளும் ஆகும்.

இந்நாளானது எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் எழுச்சியைக்காட்டி நிற்கும் நாளாகவும் அமைந்துள்ளது.

எமது தேசிய தலைவரின் போராட்ட கரத்தை வலுப்படுத்தி நிற்கின்ற நாளாக இன்றைய நாளைக் காண்கின்றோம்.

இங்கு கூடியுள்ள மக்கள் கூட்டம் எமது போராட்டத்தின் முன்னெடுப்புகளில் மிகப்பெரிய சக்தியையும், வேகத்தையும் காட்டி நிற்கின்றது.

### வித்தியாசமான காலப்பகுதியில் காலடி

இன்று நாம் வித்தியாசமான சூழ்நிலையில் வித்தியாசமான காலப்பகுதியில் காலடி எடுத்து வைத்துள்ளோம்.

எமது போராட்ட வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்துக்குள் காலடி எடுத்து வைத்துள்ளோம்.

தரை, கடல் மார்க்கங்களில் மட்டுமன்றி வான் பரப்பிலும் எதிரியை எதிர்கொண்டு வெல்லக் கூடிய புதிய சகாப்தமே அதுவாகும்.

எமது இனத்தை எந்தசக்தி எதிர்த்தாலும், அதை அடிபணிய வைக்கமுடியும் என்ற உண்மை நிலையை இத்தாக்குதல் காட்டி நிற்கிறது.

40 வருடமாக நடக்கும் எமது உரிமைப் போராட்டம் தீவிரமாக உச்சமடையும் நேரங்களில் எல்லாம் பேச்சுவார்த்தை என்றும், அரசியல் தீர்வு என்றும், சமாதான முயற்சிகள் என்றும் எமது போராட்டங்களை நசுக்க முற்பட்டதாகவே வரலாறுகள் உள்ளன.

ஆனால் எமது தேசியத் தலைவரால் எமது உரிமைப் போர் வடிவம் மாற்றப்பட்டு ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து எம் இனத்தை இனி எவராலும் ஏமாற்ற முடியாதென்ற நிலை தோன்றியது.

எமது தேசியத் தலைவர், சிங்கள இனவாதம் மனம் மாறி, சமாதானம், தமிழர்களின் உரிமை என்பதில் நேர்மையாக வரும்போது அதற்கான சந்தர்ப்பத்தையும், நேசக்கரத்தையும் நீட்டியே வந்துள்ளார்.

### சந்திரிகா மீது வைத்த நம்பிக்கை

ஆனால் இதுவரை இல்லாத ஓர் அரசியல் மாற்றம் என்று சந்திரிகாவின் வருகையை அனைவரும் நம்பினோம்.

ஆனால் அவர் பதவி ஏற்ற பின்னர் அவரின் நடவடிக்கைகள் அவர் மீது வைத்த நம்பிக்கையை தகர்த்துள்ளதையே காண்கின்றோம்.

வரலாற்றில் எப்படியான சிங்கள இனவாதங்களைக் கண்டோமோ, அதே மாதிரியான இன வாதத்தை சற்று வடிவம் மாறி ஓர் ஆபத்தான இனவாதமாக இன்று காண்கிறோம்.

சந்திரிகா தன்னை உலகத்துக்கும், சிங்கள மக்களுக்கும் ஓர் புத்திசாலித் தனமான தலைவியாகக் காட்ட முனைகிறார்.

வெளிப்படையாக முரட்டுத்தனமாக இனவாதம் பேசாது, செயலில் தமிழ் மக்கள் மீது எந்தளவுக்கு இனவாதத்தை தொடுக்க முடியுமோ அந்தளவுக்குத் தனது திறமையைக் காட்ட முனைகிறார்.

ஆனால் இவை தற்காலிகமாக சற்று எடுபட்டாலும் நீண்ட நோக்கில் சந்திரிகா மிகவும் ஆபத்தான அரசியல் நிலைக்கு தள்ளப்படுவார் என்பது தான் உண்மையான விடயமாகும்.

தமிழீழப் பிரதேசத்தில் தமிழினத்துக்கான பலமான, உறுதியான பலத்தைப் பெற்றிருக்கின்ற இன்றைய தேசியத் தலைமையையும், போராட்ட சக்தியையும் — மிகவும் புத்திசாலித்தனமாக சமாதானம், சலுகைகள் என்று வெளி உலகுக்கு காட்டி தமிழ் மக்களிடம் இருந்து அந்நியப்படுத்துவதோ அல்லது சிறிது சிறிதாக நசுக்கி அழித்து விடுவதோ தான் சந்திரிகாவின் திட்டம்.

முந்திய இனவாத அரசுகளை விட சந்திரிகா ஓர் புத்திசாலித் தனமான, மிகவும் சாதுரியமான சிங்கள இனவாதத் தலைவியாக இருப்பதையே இன்று நாம் காணக்கூடியதாக இருக்கிறது

இன்றைய நிலையில் அண்மைக்காலமாக நடந்த பேச்சுவார்த்தைகள் சம்பந்தமாகவும், பேச்சுவார்த்தை அரங்கில் நடந்த உண்மை நிகழ்வுகள் சம்பந்தமாகவும் சிறிது விளக்குவது நல்லதென்று நினைக்கிறேன்.

சந்திரிகா அரசு வெற்றிவாகை சூடியபோது எமது மக்கள் மத்தியிலும், எம் மத்தியிலும் மிகப்பெரும் நம்பிக்கை இருந்தது.

தமிழ் மக்களுக்கு உரிமை கிடைக்கும், சுதந்திரம் கிடைக்கும். தமிழ் மக்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகள் மீட்டெடுக்கப்படும், தீர்வு எட்டப்படும் என்று எல்லோருக்கும் நம்பிக்கை இருந்தது.

### நேசக்கரம் நீட்டினோம்

யுத்தம் இன்றி தமிழ் மக்களின் மறுக்கப்பட்ட உரிமைகளை வழங்கி இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பேன் என்று ஆணித்தரமாக சந்திரிகா கூறி தேர்தல்களில் வெற்றியீட்டினார்.

அவர் பிரதமராக பதவி ஏற்றபோது எமது தேசிய தலைவர் நல்லெண்ணத்தைக் காட்டும் முகமாக எம்மிடம் இருந்த போர்க்கைதிகள் பலரை விடுதலை செய்தார்.

பேச்சுவார்த்தை முயற்சிக்கு நேசக்கரத்தை நீட்டினோம். சந்திரிகா இதை ஏற்று ஒரு கடிதத்தை எமக்கு அனுப்பியிருந்தார்.

முதலில் இங்கு வாழும் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினையைத் தீர்க்கப் போவதாக அக்கடிதத்தில் தெரிவித்து பேச்சுக்கான நிகழ்ச்சி நிரலையும் அனுப்பியிருந்தார்.

சிங்கள மக்கள் அனுபவிக்கும் வாழ்க்கை நிலையை தமிழ் மக்களும் அனுபவிக்கச் செய்யவும், யுத்தத்தால் அழிந்த பகுதியை புனரமைக்கவும் அவர் முன்வந்தார்.

அது பற்றியே முதலில் பேசவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இதை எமது தலைவர் வரவேற்றார்

முதலாம் கட்டப் பேச்சுக்கு வந்தவர்களும் இந்த விடயத்தையே விளக்கினார்கள்.

இப்போது சந்திரிகா பிரதமராக இருக்கிறார். அவர் ஜனாதிபதியானதும் இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பார் என்று முதலாம் கட்ட பேச்சுக்கு வந்தவர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி பதவியேற்ற போது எவரும் எதிர்பாராத விதமாக மோதல் தவிர்ப்பு உடன்பாட்டைக் கொண்டு வர நாமும் இணங்கி எமது நல்லெண்ணத்தைக் காட்டினோம்.

ஆனால் ஜனாதிபதியான பின்னர் அவர் நிலைப்பாடு பெரும் அதிர்ச்சியை தருவதாக இருந்தது.

ஜனாதிபதியான பின்னர் தேசியத்தலைவருக்கு எழுதிய கடிதத்தில் அன்றாடப் பிரச்சினை சம்பந்தமாக பேசுவதை விடுத்து இனப்பிரச்சினை, அரசியல் பிரச்சினை பற்றி முதலில் பேசுவோம் என்ற நிலைப்பாட்டை எடுத்தார்.

அது எமக்கு பெரும் வேதனையையும், அதிர்ச்சியையும் தந்தது இந்த பிரச்சினையின் முக்கியத்துவம் குறித்து மீண்டும் தலைவர் கடிதம் எழுதினார்.

தமிழ் மக்களுக்கான போக்குவரத்து பாதையை திறப்பது, தமிழ் மக்களுக்கு தடுக்கப்பட்டுள்ள முன்னைய அரசால் கொண்டுவரப்பட்ட தடைகளை நீக்கி மக்கள் நிம்மதியாக வாழ முடிவு எடுக்குமாறு கோரினோம்.

அதற்கு இணங்கி 2 ஆம் கட்டப் பேச்சுக்கு வந்தார்கள். அப்போது எமது அன்றாடப் பிரச்சினை பற்றி ஆணித்தரமாகப் பேசினோம்.

அரச பிரதிநிதிகள் மிகுந்த ஆர்வத்துடன் இருந்தனர். யுத்த நிறுத்தத்தை உடன் கொண்டுவருவதில் அவர்கள் ஆர்வம் காட்டினர்.

ஏன் இதைக் கொண்டுவர அவசரப்படுகிறார்கள் என்பது அப்போது எமக்கு புரியவில்லை.

யுத்த நிறுத்தத்தை கொண்டு வருவோம் என நாம் கூறினோம். ஆனால் புதிய சொற்பதத்துடன் புதிய நடவடிக்கையாக தாக்குதல் இடைநிறுத்தம் என்ற சொற்பதத்துடன் ஓர் ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவோம் என்று கூறினார்கள்.

"அதுதேவையில்லை முழுமையான யுத்த நிறுத்தத்தைக் கொண்டுவருவோம். எதிர்காலப் பேச்சுக்களுக்கு அது உதவும்" என்று கூறினோம்.

ஆனால் அவர்கள் அதற்கு இணங்கவில்லை.

இருவாரத்துக்கு மோதல் தவிர்ப்பைக் கொண்டுவருவோம் பின்னர் அதுபற்றி பேசுவோம் என்று கூறினார்கள்.

அரசின் வேண்டுகோளுக்கு இணங்கி [illegible] அதுபற்றி பேசினோம். தெளிவாக முழு விடயங்களையும் பேசினோம்.

மீன்பிடித்தடை சம்பந்தமாகவும், போராளிகளின் நடமாட்டம் சம்பந்தமாகவும் தெளிவான முறையில் விளக்கம் கேட்டோம். அதற்கு விளக்கம் தந்தார்கள் 2 3 நாட்களில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

### ஒப்பந்தத்தை அரசே மீறியது

கைச்சாத்திடப்பட்ட ஓரிரு நாட்களில் இந்த ஒப்பந்தத்தை மீறும் வகையில் அரச மீன்பிடி தொடர்பாக புதிய புதிய நிபந்தனைகளையும் எமது போராளிகள் கிழக்கில் நடமாட புதிய நிபந்தனைகளையும் போட்டது

உடன் இதுபற்றி அரசுக்கு சுட்டிக்காட்டினோம்.

பேச்சையும், ஒப்பந்தத்தையும் சுமுகமாக கொண்டு போக இது உதவாது என்று கூறினோம். விளக்கம் தருமாறு கேட்டோம். அவர்கள் தட்டிக் கழித்தார்கள் நாங்கள் பொறுமையாக இருந்தோம்.

எமது பொறுமையை எவ்வளவு தூரம் காட்டமுடியுமோ அவ்வளவு தூரத்துக்கு காட்டினோம்.

பின்னர் எமது போராளிகள் கிழக்கில் ஆயுதங்களுடன் கைதுசெய்யப்பட்டதுடன் பெருமளவு ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. எமது ஆதரவாளர்கள் அவர்களது கைக்கூலிகளால் கொல்லப்பட்டனர்.

இப்படி பல நூற்றுக் கணக்கான யுத்த இடைநிறுத்த மீறல்கள் இடம்பெற்றன.

இவை எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு சமாதானத் தீர்வுக்காக விட்டுக் கொடுத்து வந்தோம்.

ஆனால் சந்திரிகா அரசு எமதுமக்களின பிரச்சினையில் கவனம் செலுத்தாது பேச்சுவார்த்தை ஊடாக பெரும் பிரசாரம் ஒன்றைச் செய்தது

### காலக்கெடு

இதனால் ஏமாற்றம் அடைந்த நிலையில் காலக்கெடு விதித்து சந்திரிகாவுக்கு கடிதம் எழுதினோம்.

அவரிடம் இருந்து வந்த கடிதம் ஓரளவுக்கு சாதகமாக அமைந்ததால் காலக்கெடுவை நீடித்தோம்.

காலத்தை இழுத்தடித்து 19 ஆம் திகதி ஒரு குழுவை இங்கு அனுப்பினார்.

சந்திரிகா அரசு மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசு ஜனாதிபதிக்கு காலக்கெடுவை கொடுத்து அச்சுறுத்துவது என்பது எம்மால் ஏற்க முடியாது என்று அவர்கள் கூறினார்கள்.

"ஜனாதிபதியையோ அல்லது அரசையோ நாம் அச்சுறுத்தவில்லை அவர்களுக்கு எச்சரிக்கை விடவுமில்லை.

"நாங்கள் உங்களுடன் பேசிக் கொண்டிருக்கின்ற ஒரு பேச்சு வார்த்தை மேசையில் இருக்கின்ற ஒரு தரப்பு பிரதிநிதிகள் என்ற வகையில் அரசு மற்றும் ஜனாதிபதி மீது நம்பிக்கையற்ற நிலையில், பேச்சில் இருந்தும் மோதல் தவிர்ப்பில் இருந்தும் விலகிக் கொள்வதற்கான முடிவை எடுக்கிறோம் அது எங்கள் உரிமை" என்று அவர்களிடம் தெரிவித்தோம்.

"19 ஆம் திகதி விடியாமலே இருக்க வேண்டும் என்று பிரார்த்திப்பதாக அவர்கள் கூறினர்.

அன்று எதற்கும் முடிவு எடுக்க முடியவில்லை.

"பொருளாதாரத் தடை, மீன்பிடித் தடை நீக்கங்கள் குறித்து ஏன் பேசவருகிறீர்கள், இதைப்பற்றிப் பேசி என்ன பயன். தடை நீக்கப்பட்டதாக அறிவியுங்கள் மக்கள் சுதந்திரமாக பொருள்களை கொள்வனவு செய்யலாம் என்று அறிவியுங்கள்" என்று அவர்களிடம் கூறினோம்.

இதுபற்றி என்ன பேச்சு இருக்கிறது என்று அவர்களிடம் கேட்டோம்.

பொருளாதாரத் தடை நீக்கம் சம்பந்தமாக ஒரு பட்டியலை கொண்டு வந்தனர்.

2 ஆம் கட்டப் பேச்சில் கொண்டுவந்த பட்டியலையே கொண்டு வந்தனர் 4 ஆம் கட்டப் பேச்சு வரை அதே பட்டியலை கொண்டு வந்தனர்.

"இதைப்பற்றி மீண்டும் மீண்டும் பேசிப் பயனில்லை. தயவு செய்து முடிவுகளை எடுங்கள் அதை நடைமுறைப் படுத்துங்கள் நடைமுறைப் படுத்தாத பேச்சுக்களிலும், முடிவுகள் எடுக்கப்படாத பேச்சுக்களிலும் அர்த்தமேயில்லை. இது உங்கள் அரசுக்கும், ஜனாதிபதிக்கும் நன்மை அளிக்கலாம். ஆனால் எமது மக்களைப் பொறுத்த வரையில் இது ஆபத்தானது. சமாதானத்தீர்வு, அரசியல் தீர்வு வரவேண்டும் என்றநம்பிக்கை எமக்கு ஏற்பட வழி காண வேண்டும். அல்லது, சுதந்திரமாக எமது போராட்டத்தை தீவிரமாக நடத்தி எமது உரிமையை பெறவேண்டும் இதைஜனாதிபதியிடம் விளக்குங்கள்" என்று அவர்களிடம் கேட்டோம்.

19 ஆம் திகதிக்குமுன் உருப்படியாக செய்யாவிட்டால் விலகுவதாக முடிவு செய்துவிட்டோம் என்று கூறினோம்.

### சிங்கள தேசியமே முக்கியம்

தெற்கில் உள்ள சமாதானப் பிரியர்களோ; சமாதானத் தூதுவர்களோ, அமைதியை விரும்புவர்களோ எல்லோருமே தாம் சிங்கள தேசியம், சிங்கள மக்கள் நலன் இராணுவத்தின் நலன் ஆகியவற்றை மையமாக வைத்தே தமது நடவடிக்கைகளை நகர்த்தி வருகிறார்கள்.

எமது தேசியத்தை, எமது இனத்தை, எமது மண்ணை, நிலைநிறுத்துவதற்கான, எமது கௌரவத்தை காப்பாற்றுவதற்கான, எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஒரு போராட்டம் தான் இங்கு நடந்து கொண்டிருக்கிறது என்பதை சகலரும் புரிய வேண்டும்.

சந்திரிகாவின் ஒரு தலைப்பட்சமான பிரசாரம் இன்று உலக நாடுகளில் ஒலிக்கிறது இது எம்மைப் பொறுத்த வரையில் ஓர் தற்காலிகமானதுதான்.

ஒரு தலைப்பட்சமான பிரசாரங்களை இந்த நாடுகள் நம்பிக்கொண்டு விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளில் சந்தேகம் கொள்வது தற்காலிகமானது. உண்மை நிலைகள் என்றோ ஒரு நாள் தெரிய வரப்போகிறது.

எமது மக்களின் நேர்மையானதும், உண்மையானதும் நியாயமானதுமான உரிமைப் போர் சம்பந்தமான விடயங்கள் அவர்களுக்கு தெரிய வரும்போது அவர்களின் முடிவுகளில் இருந்து நிச்சயமாக மாற்றம் பெறுவர்.

தமது முடிவுகளை மாற்றுவார்கள் என்பதில் எமக்கு நம்பிக்கை இருக்கிறது

(இ-3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இராசவீதியில் பதினைந்து (15) பரப்பு, இணற்றுடன் தோட்டக்காணி விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு ப. சிவயோகநாதன், இல. 43, மூன்றாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (36488)

## தேவை

தோடம்பழம், பப்பாளிப் பழம் கொள்வனவு செய்யப்படும், Taste Line Industries (Pvt) Ltd 14. Seenier lane, Jaffna. [சி-1101]

பிறவுண் பியர் போத்தல் (650 மி. லீ.), குளிர்பானப் போத்தல் (400 மி. லீ., 200 மி. லீ) தேவை. சர்வதேச உயிர் நுட்பு, இல. 234, இராமநாதன் வீதி, திருநெல்வேலி. [36493]

## சோதிடம்

வெளியூர் ஜெனன ஜாதகக் குறிப்பு உடன் எழுதிக் கொள்ள மற்றும் ஜாதகக் குறிப்பு பலன் பார்க்க ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், இல 158, கோவில் வீதி, நல்லூர் (36491)

## மணப்பெண் தேவை

உத்தரம் 1ஆம் பாதம், 5 அடி 4 அங் உயரம். 36 வயது, வெளிநாட்டில் வேலை பார்க்கும் செவ்வாய்க்குற்ற மற்ற M B B.S. டாக்டருக்கு பட்டதாரிகள் அதற்கு மேற்பட்ட தராதரமுள்ள அழகிய மணமகளைத் தேடுகின்றனர். முழு விவரங்களுடனும் சாதகக் குறிப்புடனும் கடிதம் மூலம் தொடர்பு: இல 780, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (36458)

## நல்லாசிரியர் தெரிவு

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஆசிரியர் வாண்மை விருத்திக் குழு, ஆண்டுதோறும் அகில உலக ஆசிரியர் நாளை ஒட்டி யாழ்ப்பாணத்திலும், வட தமிழீழப் பெரு நிலப்பரப்பிலும் நல்லாசிரியர்களைத் தெரிவு செய்து கௌரவிக்கத் தீர்மானித்துள்ளது.

ஆசிரியர் வாண்மை விருத்திக்குழுவினால் வெளியிடப்படுவரும் 'விளக்கு' சஞ்சிகையின் சார்பில் இதனை நடத்துவது என கடந்த புதன்கிழமை நடைபெற்ற குழுவின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

ஆசிரியரின் வகுப்பறை, பாடசாலை, சமூகம் ஆகிய மட்டங்களிலான செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இத் தெரிவு இடம் பெறவுள்ளது.

இத் தெரிவு பற்றிய விரிவானதும் விளக்கமானதுமான விவரங்கள் அடுத்து வெளிவரவுள்ள "விளக்கு" சஞ்சிகையின் பங்குனி-சித்திரை இதழில் பிரசுரமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## வீதி திருத்தம்

நீண்ட நாட்களாக குன்றும் குழியுமாக இருந்த நுணாவில் சந்தியையும் கலகன் புளியடிச் சந்தியையும் இணைக்கும் வீதி தற்போது தமிழீழ நிர்வாக சேவையின் கீழ் அபிவிருத்திச் சபையால் செப்பனிடப்படுகிறது. (ஒ-3)

## நோய்பரவல்

தென்மராட்சி, மே 3 பச்சிலைப்பள்ளிப் பகுதியில் கொப்புளிப்பான், கூகைக் கட்டு, சின்னமுத்து போன்ற நோய்கள் பரவி வருகின்றன.

அண்மையில் நிலவிய வெப்பத்தினால் இந்நோய்கள் பரவுவதாக தெரிவிக்கப்பட்டது. [க-117]

## நிதி உதவி

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் விபத்து நிதித்திட்டத்தின் கீழ் 38 பனை தென்னை தொழிலாளர்களுக்கு 2 வகுட ங்களில் 66 ஆயிரத்து 250 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 20 ஆம் திகதி வடமாகாண பனை தென்னை வள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (க-4)

---

# நியூட்டன் அக்கடமி

இருபாலை வீதி, கோண்டாவில்.

வழமையான தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால்

**O/L DAY CLASS** (பகல் முழு நேரம்)

பிரிவு II

**ஆரம்பம்: 05 - 05 - 1995**

வெள்ளி காலை 8.00 மணி

பிரிவு I அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

பிரத்தியேக வகுப்பு

★ கணிதம் ★

S. கருணாகரன்

திங்கள், வெள்ளி மாலை 4 — 5-30

**ஆரம்பம்: 05 - 05 - 1995**

[36489]

---

# ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 07 | 14 |
| 03 | 05 |
| 1975 | 1994 |

**செல்வன் சி. ஞானபாஸ்கரமூர்த்தி (ஆதித்தன்)**

(வீமன்காமம் வடக்கு, தெல்லிப்பழை)

திதி: 03 — 05 — 1995


ஆண்டொன்று சென்றாலும் ஆறிடுமோ எமது நெஞ்சம் எண்ணாத நேரத்தில் எமை எல்லாம் ஆறாத் துயரத்தில் ஆழ்த்தி விட்டுச் சென்ற போதிலும் உமது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

அப்பா, அம்மா,
சகோதரிகள், சகோதரர்கள்,
மைத்துனர்மார், மருமக்கள்,
உறவினர்கள், நண்பர்கள்,

திருமதி கௌரி சிறீதரன்,
பழம் வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். [36480]

---

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் வீ.க. வல்லிபுரம்**

(உரிமையாளர்: சிவலிங்கம் மில், பிரபல வர்த்தகர்)

சிரார்த்த திதி நாள்: 03—05—1995

புதன்கிழமை

| பூவுலகில்: | விண்ணுலகில்: |
|---|---|
| 26-01-1926 | 25-04-1993 |

எமது கலங்கரை விளக்கமாய்த் திகழ்ந்து தாங்கள் மறைவெய்தி ஈராண்டுகளானாலும் என்றென்றும் தங்கள் பிரிவினை எண்ணி நைந்து நடுக் கொண்டிருக்கின்றோம் கருணை மூர்த்த விநாயகரின் திருவருளால் தங்கள் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

உறவினர், அன்பர்களை அன்னாரின் சிரார்த்த கிரியைகளிற் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாக அழைக்கின்றோம்.

—அமரரின் குடும்பத்தினர்.

குருக்கட்டு,
காளவாய் தெற்கு,
கரவெட்டி, (36473)

---

உ

கரவெட்டி - தச்சன் தோப்பு

அருள்மிகு

## ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் தேவஸ்தானம்

புனராவர்த்தனப் பிரதிஷ்டா திருக்குடத் திருமஞ்சன நவகுண்ட மகாயாக

# மஹா கும்பாபிஷேகம்

சித்திரை மாதம் 18ஆம் திகதி:

**[02.05.95]** செவ்வாய்க்கிழமை

பின்னிரவு அதிகாலை 4மணியளவில் கும்பாபிஷேக பூர்வாங்க கிரியைகள் யாவும் ஆரம்பித்து தொடர்ந்து நடைபெறும்.

சித்திரை மாதம் 22ஆம் திகதி

**[05.05.95]** வெள்ளிக்கிழமை

காலை 8.40முதல் 10-20 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

கும்பாபிஷேக பிரதமகுரு

"வேதாகம மாமணி"

சிவஸ்ரீ பால. வைத்தியநாத சிவாச்சாரியார்

(ஊரெழு)

"அடியார்கள் வந்து தரிசித்து ஆனைமுகன் அருள பெறுக"

பரிபாலனசபை
க சிவகுருநாதர்.
[முகாமையாளர்]

கரவெட்டி மத்தி,
கரவெட்டி. (36490)

---

# வட இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி

**DIPLOMA IN COMPUTER PROGRAMMING BASIC LANGUAGE**

ஆரம்பம்

| வார நாள் / வார இறுதி நாள் | பிரிவு 1 | பிரிவு 2 |
|---|---|---|
| 05 05 1995 | 10-30 | 3 30 |
| 07 05 1995 | 9-00 | 4 00 |

★ சர்வதேச பாடத்திட்டத்திற்கு அமைய முற்றிலும் மாற்றி அமைக்கப்பட்ட பாடநெறி.

★ மாணவர்களின் வசதிக்கு ஏற்ப தனி/குழு வகுப்புக்களுக்கு ஏற்பாடு செய்து தரப்படும்.

★ கூடிய செய்முறைப் பயிற்சியும் தவணை முறைக் கட்டண வசதியும்

★ சிறந்த மாணவர்களுக்கு மூன்று மாத காலம் இலவச உள்ளகப் பயிற்சி அளிக்கப்படும்.

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

14, ST. PETER'S LANE, JAFFNA.

[சி-1342]

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L DAY CLASSES**

காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரை

✶ மீண்டும் ஓர் புதிய பிரிவு ✶

புதிய 5 ஆம் பிரிவு

**ஆரம்பம்: 04 - 05 - 1995**

(வியாழன்) காலை 8.30 மணி

| | |
|---|---|
| விஞ்ஞானம் திரு. J R சூரி | கணிதம் திரு. சுயாளன் |
| வரலாறு சமூககல்வி திரு. கோபி | ஆங்கிலம் திரு விஸ்வநாதன் |
| தமிழ் திரு. திருப்பதி திரு. பிரதீபன் | சமயம் திரு. N. சங்கர் |
| வர்த்தகம் திரு. கருணாகரன் | கிறிஸ்தவம் திரு. சிலன் |
| | சித்திரம் திரு குணா |

**SAT, SUN CLASSES** (8-00 — 2-00)

புதிய பிரிவு (2ஆம் பிரிவு)

**ஆரம்பம்: 06 - 05 - 1995**

(சனி) காலை 8.00 மணி

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

[சி-1329]

---

# கலை வர்த்தகக் கல்லூரி

**C.C.A.** பட்டப்படிப்பு பிரிவு

| | | |
|---|---|---|
| G A Q. | யாழ்ப்பாணம் போரதனை | 96 |
| G. A Q. | யாழ்ப்பாணம் | 95 |

பொருளியல் — திரு. உதயன்

விரிவுரை ஆரம்பம்: 03 - 05 - 95

மாலை 5-00மணி

★ ஏற்கனவே அனுமதி பெற்றவர்களுக்கு 03-05-95 இல் சமுகம் அளிக்கவும்.

(சி/1347)

---

# எடிசன் அக்கடமி

(யாழ். இந்து அருகில்)
411/1, K. K. S Rd
யாழ்ப்பாணம்

(கொக்குவில் இந்து அருகில்)
27, K. K. S Rd.
கொக்குவில்

**O/L DAY CLASS**

மற்றுமோர் 2 ஆவது புதிய பிரிவு

கணிதம்

திரு. B P. பாஸ்கரன்

விஞ்ஞானம்

யாழ். முன்னணி ஆசிரியர் J. J கொலின்ஸ்
வடமராட்சி பிரபல ஆசிரியர் N மகேந்திரன்
வடமராட்சி முன்னணி ஆசிரியர் எ.எ. செல்வா

★ ஏனைய பாடங்களுக்கும் பிரபல ஆசிரியர் குழு
★ ஆண்டு 9 10 11 பாடத்திட்டம் பூர்த்தியாக்கப்படும்
★ கணிதம் இலகு முறையில் அடிப்படையில் இருந்து போதிக்கப்படும்

ஆரம்பம்

**04-05-1995** வியாழன் மு.ப8.30

(சி/1130)

---

# நியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

**O/L DAY CLASS**

பிரிவு II

**ஆரம்பம்: 08 - 05 - 1995**

(திங்கள்)

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | — | திரு. மகேந்திரன் |
| தமிழ் | — | திரு சிவா |
| சமூகக்கல்வி | — | திரு. வேலா |
| ஆங்கிலம் | — | திரு. சத்தியமூர்த்தி |
| சமயம் | — | திரு. ஸ்ரீ |
| சித்திரம் | — | திரு. அரவிந்தன் |

(சி/1331)

---

## தேவை

யாழ் / ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிறுவனத்திற்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தயாரிப்பதற்கான பயிலுநர்
   (Gas Welding மற்றும் தொழில் நுட்பத் திறமை பெற்றிருத்தல் வேண்டும்)
2. பாதணி தயாரிப்பாளர்
   (பாதணி தயாரிப்பில் அனுபவம் பெற்றவர்கள் விரும்பத்தக்கது)
3. வலுவிழந்தோருக்கான உபகரணங்கள் தயாரிப்பதற்கான பயிலுநர்
   (ஒட்டு வேலை [Gas & Electric, Welding] அனுபவம் தேவை)
4. ஓட்டோ வாகனச் சாரதி / அலுவலக உதவியாளர்
   (வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம், 2 வருட அனுபவம் என்பன இருக்க வேண்டும்)
5. களஞ்சியப் பொறுப்பாளர்
   (க. பொ. சாதாரணம், கல்விச் சான்றிதழுடன் 3 வருட அனுபவம் இருக்க வேண்டும்)

✶ சம்பளம் தகுதிக்கேற்ப வழங்கப்படும்.

வயதெல்லை 18 — 40

★ உடல்வலுவிழந்தோருக்கும் தொழிற்சாலைக்கு சமீபமாக வசிப்போருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

★ விண்ணப்பங்கள் 15 — 05 — 1995க்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியதாக சான்றிதழ்களின் பிரதிகளுடன் அனுப்பி வைக்கவும்.

நிர்வாகக் குழு,
ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிறுவனம்,
இல. 5, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-1135]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
**292/2 காங்கேசன்துறை வீதி**
**யாழ்ப்பாணம்**

## தவிர்க்க முடியாதது

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்து போனமைக்கான காரணங்கள், பின்னணி என்பவற்றையும் —

அந்த முறிவினால் உண்டாகியுள்ள புதிய அரசியல் நிலைமை, இராணுவ நிலைமை ஆகியவற்றையும் —

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மே நாள் விழாவில் பேசுகையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் மிக விவரமாக விளக்கியுள்ளார்.

சந்திரிகா பதவிக்கு வந்ததும் சமாதானம் மலரும் என்று இருந்த நம்பிக்கை, இப்போது எவ்வாறு கருகிப் போயுள்ளது என்பதனை அவர் ஆதியோடு அந்தமாக எடுத்துக் கூறினார்.

சமாதானம் உருவாகும், என்றிருந்த நம்பிக்கையை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதால், மீண்டும் உறுதியாகப் போராடுவதன் மூலமே தமிழர்கள் தமது உரிமைகளை மீட்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் சொன்னார்.

விடுதலைப் புலிகள் பலவீனமான நிலையில் நின்றே பேச்சுவார்த்தை, சமாதானத் தீர்வு என்ற முடிவுகளை எடுத்தார்கள் என்று ஜனாதிபதி சந்திரிகா கருதியதாலேயே பேச்சுவார்த்தை முறிய நேரிட்டது என்று திரு. தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டினார்.

சமாதானத்தை அடைவதில் விருப்பமும், அக்கறையும் இருப்பதாகக் கூறிக்கொண்ட சந்திரிகா, அதற்கான சரியான வழிமுறைகளைக் கையாளவில்லை என்பதனை நடுவுநிலைமையான அரசியல் விமர்சகர்கள் பலரும் எடுத்துக் கூறத் தவறவில்லை. பேச்சுக்களில் கலந்துகொண்ட அரசாங்கத் தரப்பினருக்குப் பேச்சு நடத்தும் நுட்பம் (Negotiating skill) இல்லை என்பது பலரது கருத்தாகும்.

இவற்றைவிட, தமிழ் மக்களின் உரிமைகளை சந்திரிகா தாம் வழங்கும் சலுகைகளாகக் கருதிக் கொண்டு செயற்பட்டதும் அடிப்படைத் தவறாகும். தமிழர்களின் உரிமைகளை வழங்குவதில் கட்டுப்பாடான போக்கும், சொல் ஒன்று செயல் வேறுமாக அவர் நடந்து கொண்டமையும் பேச்சு வார்த்தை முறிவடையவும், தமிழ் மக்கள் அவர் மீது நம்பிக்கை இழக்கவும் ஏதுவாகின.

நூறு நாள்களாக நடைமுறையில் இருந்த மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிந்து போன பின்னர், புலிகள் தரப்பில் இராணுவத் தாக்குதல்கள் நடத்தப்பட்டாலும், பேச்சுவார்த்தையைத் தொடர்வதில் அக்கறை உண்டு என்று ஆரம்பத்தில் கூறிய சந்திரிகா, பாரிஸ் சென்று திரும்பிய பின்னர் போரை நாடும் ஆக்ரோஷம் நிறைந்தவராகவே காணப்படுகிறார்.

போர்விமானங்கள் இரண்டு யாழ்ப்பாண வான் பரப்பில் சுட்டு வீழ்த்தப்பட்டதால் அவர் இந்தளவு இராணுவக் கடுமையாளராக மாறினார் என்று சொல்லமுடியாது. ஏற்கனவே அவரிடம் போர்க்குணம் இருந்திருக்கிறது என்றே கருதவேண்டும்.

தமிழர்களைப் புறம்பாகவும், விடுதலைப்புலிகளைப் புறம்பாகவும் கருதி, ஐக்கிய தேசியக்கட்சி கையாண்ட முறைகளைப் பின்பற்றவே சந்திரிகா முனைகிறார் என்பது வெகு தெளிவாகத் தெரிகிறது. மிகக் குறிப்பாக ஜே. ஆர். ஜெயவர்த்தனா, விஜேதுங்கா காலத்து வழிமுறைகளைக் கலந்து கைக்கொள்வதற்கு அவர் தயாராகிறார்.

ஆகையால், தமிழர்கள் தங்கள் உரிமைகளை போராடிப் பெற வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். எவ்வாறு அவர்கள் ஆயுதம் ஏந்துவதற்கு உந்தப்பட்டார்களோ அதே போல போராட்டத்தை தமது உரிமைகள் கிடைக்கும் வரை தொடரவேண்டிய நிலைக்கும் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். சந்திரிகாவின் போக்கினால் இது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது என்பதே இன்றைய தள நிலைமை.

# இளைஞரை ராணுவத்தில் சேர்க்க தென்பகுதியில் சுவரொட்டிகள்

## 10 ஆயிரம் பேரை திரட்ட நேர்முகப்பரீட்சை

கொழும்பு, மே 3

ராணுவத்தில் மேலும் 10ஆயிரம் பேரை புதிதாகச் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் நேற்று சகல பிராந்திய ராணுவத் தளங்களிலும் ஆரம்பமாகின. 5ஆம் திகதிவரை நேர்முகப் பரீட்சைகள் தொடர்ந்து நடைபெறும்.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு முன்னோடியாக ராணுவத் தலைமையகம் கடந்த 28ஆம் திகதி கொழும்பிலும் வெளி மாவட்டங்களிலும் பெரும் அளவு சுவரொட்டிகளை ஒட்டி இருந்தது.

இளைஞர்களை ராணுவத்தில் சேருமாறு அந்த சுவரொட்டிகளில் கோரப்பட்டிருந்தது.

வடக்கில் மோதல்கள் தீவிரமடைந்து அபாயகரமான அளவை அடையும் நிலைமையில் படைக்கு புதியவர்களைச் சேர்த்தல் பயிற்சி அளித்தல், விரிவரிசைப் படுத்தல் ஆகியன மிக முக்கியத்துவம் அடைகின்றன என்று ராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ராணுவத்தின் சகல பட்டாலியன்களிலும் குறிப்பாக தரைப்படைப்பட்டாலியனில் பெரும் எண்ணிக்கையான வெற்றிடங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் ஆயிரக்கணக்கானோர் சொல்லிக்கொள்ளாமல் ராணுவத்தை விட்டுவெளியேறி இருந்தனர். ராணுவத்தில் ஆள்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கும் போதுமானோர் தோற்றத் தவறி இருந்தனர்.

வழமையாக பட்டாலியன் ஒன்றில் அதிகாரிகளும் படையினருமாக 900 பேர் இருப்பார்கள். ஆனால் தற்போது சில பாட்டாலியன்களில் 500 முதல் 600 பேரே உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பட்டாலியன்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்ப கடந்த இரண்டு ஆண்டுகளில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று ராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். [இ-க]

# கிழக்கில் கைதான 174 பேர்பற்றி இதுவரை தகவல் எதுவும் இல்லை

கொழும்பு ஏப் 3

1990 ஆம் ஆண்டு கிழக்கு பல்கலைக்கழக அகதி முகாமில் நடத்தப்பட்ட இரு வேறு சுற்றி வளைப்பு நடவடிக்கைகளின் போது கைது செய்யப்பட்ட நூற்றிஎழுபத்திநான்கு பேர் பற்றி இதுவரை எதுவித தகவலும் கிடைக்கவில்லை.

5. 9. 90 இல் இங்கு நடந்த சுற்றி வளைப்பின் போது 10 வயது தொடக்கம் 40 வயது வரையான 158 பேர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டனர்

23 9 90 இல் நடைபெற்ற சுற்றி வளைப்பின் போது 16 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் பற்றிய விவரங்களே இன்று வரை வெளிவராமல் உள்ளன.

5. 9. 90 இல் இங்கிருந்து 31 பேர் மட்டுமே கைது செய்யப்பட்டதாகவும், 24 மணி நேரத்தில் அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டு விட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருந்தது.

பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட பெயர் பட்டியலில் இங்கிருந்து கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்ட 158 பேரின் பெயர்கள் வெளியிடப்படவில்லை

ஆனால் 8. 9 90 இல் நிலைமையை அவதானிக்க அங்கு சென்ற இராணுவ உயர் அதிகாரி ஒருவரிடம் இச் சம்பவம் பற்றி பிரஸ்தாபிக்கப்பட்ட போது இவர்கள் அனைவரும் குற்றவாளிகள்; இவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக, வடக்கு — கிழக்கில் காணாமற் போனோர் தொடர்பாக விசாரணைகளைமேற் கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

இதுதொடர்பான ஆணைக்குழுவின் விசாரணைகள் ஓய்வு பெற்ற நீதியரசர் கே. பாலகிட்ணர் தலைமையில், மட்டக்களப்பு வில்லியம் ஓல்ட் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன. [இ-5]

# மட்டக்களப்பு புறநகர்ப் பகுதியில் கூட்டாக பாரிய தேடுதல் நடவடிக்கை

கொழும்பு, மே 3

பொலிஸ், இராணுவம் மற்றும் விமானப்படை ஆகிய மூன்று படையினரும் இணைந்து பாரிய தேடுதல் நடவடிக்கை ஒன்றை கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பில் நடத்தினர்.

மட்டக்களப்பு புறநகர் பகுதிகளான திமிலைதீவு, சேத்துக்குடா. புதூர் ஆகிய பகுதிகளே அதிகாலை வேளை சுற்றிவளைக்கப்பட்டு, தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இத் தேடுதல் வேட்டையின் போது ஆண்கள், பெண்கள் என அனைவருமே, புதூர் விக்கினேஸ்வரா வித்தியாலய மைதானத்துக்கு அழைக்கப்பட்டு வேறு வேறாக நிறுத்தப்பட்டு சோதனையிடப்பட்டனர்.

அவர்களது அடையாள அட்டைகளும் மிக நுணுக்கமாக ஆராயப்பட்டன.

சந்தேகத்திற்கிடமானோர் நிறுத்தப்பட்டு மேலதிக விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். (இ-5)

# வெள்ளி முதல் ஆறு நாள்களுக்கு நல்லூரில் நடைபெறும் கம்பன் விழா

யாழ்ப்பாணம், மே 3

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் 15ஆம் ஆண்டு நிறைவுக் கம்பன் விழா நல்லூர் கந்தசுவாமி கோயில் வடக்கு வீதி விழாப் பந்தலில் எதிர்வரும் 5ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை நடைபெறும்.

விழாவின் ஆரம்ப தினமான 5ஆம் திகதி மாலை 4-30 மணிக்கு கம்பன் உருவப்படம் கம்பன் கோட்டத்திலிருந்து விழாப் பந்தல் வரை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும்.

தொடர்ந்து மூதறிஞர் கௌரவம் —

மகரயாழ் விருது வழங்கல் —

கழகம் நடத்திய கவிதை, பேச்சு, கட்டுரைப் போட்டிகளுக்கான பரிசளிப்பு —

கம்பமலர் நூல் வெளியீடு, — ஆடல் வேள்வி ஆகியன இடம்பெறும்.

மே 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணி முதல் சங்கமும் கம்பனும் இயற்கையைக் கையாண்ட விதம்'' ஆய்வரங்கு, பட்டிமண்டபம் என்பன இடம் பெறும்.

மாலை நிகழ்ச்சியாக 4-30 மணிக்கு மங்கள இசையும் தொடர்ந்து உரைகளும் இடம்பெறும்.

மூன்றாம் நாள் நிகழ்வாக 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணி முதல் கலைதெரி அரங்கம், கவி அரங்கம் என்பன நடைபெறும்.

மாலை நிகழ்ச்சியாக மங்கள இசை, உரைகள் என்பன இடம்பெறும்.

நான்காம் நாள் நிகழ்வுகளாக 8ஆம் திகதி திங்கட்கிழமை காலையில் சுழலும் சொற்போர், கம்பன் இசை அமுது, இலக்கிய ஆணைக்குழு என்பனவும்—

மாலையில் மங்கள இசை, உரைகள் என்பனவும் இடம் பெறும்.

ஐந்தாம் நாள் நிகழ்வுகளாக 9ஆம்திகதி செவ்வாய்க்கிழமை காலையில் 'கம்பசூத்திரம்' கருத்தரங்கம், 'இவர்கள் பார்வையில் கம்பன்' இளைஞர் அரங்கு, இரண்டாம் நாள் பட்டிமண்டப—மேன்முறையீட்டு பட்டிமண்டபம் என்பன இடம் பெறும்,

மாலையில் மங்கள இசையும் உரைகளும் இடம்பெறும்

ஆறாம் நாளான 10 ஆம் திகதி புதன்கிழமை காலை 9-30 மணி முதல் கம்பனின் குறள் விளக்கம்' ஐயந்தெளி அரங்கம், அமரர் ஆசிரியமணி ஆர் ரி. சுப்பிரமணியம் அவர்களின் உருவப்பட திறப்பு, ''விஸ்வாமித்திரர் குற்றவாளி'' வழக்காடு மன்றம், 'அகலிகை சாப விமோசனம்' வில்லிசை என்பனவும் மாலை மங்கள இசை, உரைகள் என்பனவும் இடம்பெறும்.

இவ்வாண்டுக்குரிய கம்பன் கழக மகரயாழ் விருதை வைத்திய கலாநிதி து. வி. ஜெயக்குலராஜாவும் கௌரவ விருதுகளை திருவாளர்கள் எப். எக்ஸ் ஸி. நடராஜா நா. முத்தையா, க. வீரகத்தி, க. வைத்தீஸ்வரக் குருக்கள் சு. வேலுப்பிள்ளை, பி. எஸ். மணியம் ஆகியோரும் பெறுகிறார்கள். (க-14)

### இன்றைய நிலையை வெளிக்கொணர

# விலகி நிற்கும் எழுத்தாளர்கள் மீண்டும் எழுத தொடங்க வேண்டும்

## நூல் வெளியீட்டு விழாவில் புதுவை இரத்தினதுரை

யாழ்ப்பாணம், மே 3

''தற்போது பல எழுத்தாளர்கள் எழுத்துத் துறையிலிருந்து விலகிக் கொண்டுள்ளனர். இவர்கள் எமது இன்றைய நிலையை வெளிக்கொண்டு வருவதற்கு மீண்டும் எழுதத் தொடங்க வேண்டும்''

தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை இவ்வாறு கூறினார்.

வட்டுக்கோட்டைக் கவிஞர் கதிர் சரவணபவன் எழுதிய ''சுதந்திர வாழ்வின் விடிவலைகள்'' என்னும் நூல் வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரை நிகழ்த்தியபோதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

வெளியீட்டு விழா வட்டுக்கோட்டை சிவன் கோயிலடி மேலை வீதியில் கடந்த 27 ஆம் திகதி வலி. மேற்கு பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசா தலைமையில் நடைபெற்றது.

கவிஞர் புதுவை இரத்தினதுரை மேலும் பேசுகையில் கூறியதாவது:

இந் நூலில் எமது போராட்டத்தின் வரலாறு கவிதைகள் மூலம் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. எமது போராட்ட வரலாற்றை எதிர்கால சந்ததியினர் இந் நூல் மூலம் அறியக் கூடியதாக இருக்கும். நடக்கும் தர்ம யுத்தத்தில் தமிழ் ஈழம் மிக விரைவில் நிச்சயமாகக் கிடைக்கும். அநீதி என்றும் வென்றதில்லை. நாமே அடுத்த சந்ததியினருக்கு பாரத்தைக் கொடுக்காமல் நாம் [illegible] துடன் அனைவரும் [illegible] எமது தமிழ் ஈழத்தை [illegible] றுக் கொள்ள [illegible]

என்று அவர் கூறினார்.

யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி நூலை வெளியிட்டு வைத்து உரை நிகழ்த்தினார். ஓய்வு பெற்ற அதிபர் சமூகமணி திரு. செ. தம்பையா மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

நூலின் மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியன் மேற்கொண்டார். அருட்புலவர் பண்டிதர் அ. ஆறுமுகம் ஆசியுரை வழங்கினார். பல பெரியார்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

நூலின் முதற்பிரதியை வலி மேற்கு வர்த்தக சங்கத் தலைவர் திரு. கோவிந்த [illegible] பெற்றுக் கொண்[illegible] (க-175)

### புலிகளின் குரல் வானொலியில்

**03 — 05 — 1995**

**புதன் இரவு**

- ★ 8-02 — குயிலோசை—நிகழ்ச்சியில் ''ஆணையை அடக்கிய அரியாத்தை'' நாட்டுக்கூத்தின் 3 ஆம் பகுதி
- ★ 8-20 — வாத்தியகானங்கள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — நாடகம் — அருள்ராஜ் எழுதிய ''அனாதைகள்'' என்பன இடம்பெறும்.

**04 — 05 — 1995**

**வியாழன் காலை**

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — விடுதலை கீதங்கள்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி என்பன இடம்பெறும்

### தமிழீழ வானொலி

**ஒலிபரப்பு**

**புதன் மாலை**

- ★ 5-01 — சிந்தனை சிதறல்
- ★ 5-03 — எழுச்சிகீதம்
- ★ 5-10 புதியவை
- ★ 5-15 — படப்பாடல்கள்
- ★ 5-30 — அறிவூற்று
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விளாடிகள்
- ★ 6-02 — உங்கள் தெரிவு
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- ★ 6 30 — மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

### தமிழ் மொழி கலைத் திறன் போட்டிகள்

தென்மராட்சி, மே 3

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் மொழி கலைத் திறன் போட்டிகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 1-00 மணி தொடக்கம் சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும். (இ-117)

# நெஞ்சை நெகிழ வைத்த ஒரு குரங்கின் காருண்யம்

கொழும்பு, மே 3

நாய் நன்றியுள்ள மிருகம் என்று கூறுவார்கள். ஆனால் குரங்கும் நன்றியுள்ள மிருகம் தான் என்பது கொழும்பு செட்டியார் தெரு பகுதியில் நடந்த ஒரு சோக சம்பவத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

தனது எஜமான் கொலை செய்யப்பட்டதை அறிந்த குரங்கு ஒன்று அவரது உயிரற்ற உடல் மீது கிடந்து கண்ணீர் சிந்தியவாறு சோகமே உருவாகக் காணப்பட்டது.

கொலை செய்யப்பட்ட நபர் இரத்த வெள்ளத்தில் கிடப்பதாக கிடைத்த தகவலை அடுத்து புறக்கோட்டை பிரதம பொலீஸ் அதிகாரி இன்ஸ்பெக்டர் இந்து கருணாரத்னா தமது சகாக்களுடன் சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்றார்.

—அப்போது இரவு 10 மணி.

இருட்டில் அழுகுரல் கேட்டது. ''ரோச்'' வெளிச்சத்தின் உதவியுடன் அவர் அந்த இடத்தை நோக்கிச் சென்று பார்த்தார்.

35 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் இரத்த வெள்ளத்தில் கிடந்தது. சடலத்தின் நெஞ்சைக் கட்டிப் பிடித்தவாறு குரங்கு ஓலமிட்டுக் கொண்டிருந்தது.

அதன் கண்களில் இருந்து தாரை தாரையாக கண்ணீர் சிந்தியபடி இருந்தது.

சடலத்தின் மீது இருந்து குரங்கை அப்புறப்படுத்தும்படி இன்ஸ்பெக்டர் உத்தரவிட்டார்.

ஆனால் சடலத்தை விட்டு குரங்கை பிரிக்கமுடியாமல் பொலீஸார் திண்டாடினர்.

சடலத்தை நெருங்க எத்தனித்த கான்ஸ்டபிள் மீது குரங்கு மூர்க்கத்தனமாகப் பாய்ந்தது.

சுமார் ஒரு மணிநேர போராட்டத்தின் பின்னர் குரங்கின் ஆவேசத்தை தடுத்த பொலீஸார் அதனைப் பிடித்து கூண்டு ஒன்றினுள் அடைத்து புறக்கோட்டை பொலீஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர்.

சடலம் கொழும்பு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய மஜிஸ்திரேட் குரங்குக்கு எவரும் உரிமை கோராவிட்டால் அதனை தெஹிவளை மிருகக் காட்சி சாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

சடலத்தையோ, குரங்கையோ யாரும் இதுவரை உரிமை கோரவில்லை.

அந்தக் குரங்கு உணவு எதனையும் உண்ண மறுத்து சோகமே உருவாக புறக்கோட்டை பொலீஸ் நிலையத்தில் காணப்படுகிறது. (ஐ)

# கொழும்பில் தமிழர்கள் நாளாந்தம் கைது

கொழும்பு, மே 3

பாதுகாப்புக் காரணங்களைக்காட்டி கொழும்பில் பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் நாளாந்தம் கைதாவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினமும் பம்பலப்பிட்டி, வெள்ளவத்தைப் பகுதிகளில் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட இராணுவத்தினர் பல தமிழ் இளைஞர்களை கைது செய்துள்ளனர்.

பொலீஸாரும் இத் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வேறும் பலதமிழ் இளைஞர்களை பிடித்துச் சென்றுள்ளனர்.

அதே சமயம் கொழும்பு காலி வீதியில் கடமையில் ஈடுபட்டுள்ள பொலீஸாரும் சந்தேகத்திற்கிடமானவர்களை கைது செய்வதாகக் கூறி பல தமிழர்களை கைதுசெய்கின்றனர்.

அடையாள அட்டை மற்றும் பொலீஸ் பதிவு சான்றிதழ் என்பவற்றை கேட்கும் பொலீஸார், அவற்றைத் தம்முடன் எடுத்து வராதோரை கைது செய்கின்றனர். (க-5)

### கோணேசர் ஆலய சுற்றாடலில்

# விகாரை அமைக்க ஆயத்தம்; ஆட்சேபித்து மகஜர்

யாழ்ப்பாணம், மே 3

திருமலை கோணேசர் ஆலயச் சுற்றாடலில் பௌத்த விகாரை ஒன்றை அமைப்பதற்கு ஆயத்தங்கள் நடைபெறுவதைக் கண்டித்தும் இந்தச் செயலை உடன் நிறுத்த ஏற்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் கோரியும் பண்டத்தரிப்புப் பிரதேச இந்து வாலிபர் சங்கம் ஸ்ரீலங்கா ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது.

''ஏற்கனவே பல இன, மத மொழி வேறுபாடுகளை வளர்த்ததால் நாடு பல சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளது. விகாரை அமைப்பு மேலும் இனங்களுக்கிடையிலான குரோதத்தை வளர்க்கும் செயலாக இருக்கும் என நம்புகிறோம்'' என்று மகஜர் கூறுகின்றது. (க)

### மைலந்தனை படுகொலை வழக்கு;

# 21 இராணுவத்தினரும் தொடர்ந்தும் காவலில்

கொழும்பு,மே 3

மட்டக்களப்பு மைலந்தனை கிராமத்தவர் பலரை கொன்று குவித்த சம்பவம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டுள்ள 21 இராணுவத்தினர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தமது காவலறைகளில் இருந்து வெளிவந்து முகாமுக்கு வெளியே நடமாட அனுமதிக்க வேண்டும் என்று இராணுவத்தினரது நலன்களை கவனிப்பதற்கு ஆஜரான சட்டத்தரணி எம். சச்சிதானந்தம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த 21இராணுவத்தினருக்கும் எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. [இ-5)

# குறொஸ்னி நகரில் இரவு நேர ஊரடங்கு

குறொஸ்னி, மே 3

செச்சினியாவின் தலைநகர் குறொஸ்னியில் ரஷ்யப் படையினர் இரவு நேர ஊரடங்கை அமுல் செய்துள்ளனர்.

இவ் ஊரடங்கு ஜூலை 4 ஆம் திகதி வரை அமுலில் உள்ளது என்று ரஷ்ய இராணுவத்தை மேற்கோள் காட்டி டாஸ் செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

குறொஸ்னியில் செச்சினிய பிரிவினைவாதிகளுக்கு எதிராக ரஷ்ய ராணுவத்தினர் கடும் சண்டையில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு குறொஸ்னியில் இரு பகுதியினரும் கடும் போரில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்யப் படையினர் கடந்த பெப்ரவரி மாதம் குறொஸ்னி நகரை கைப்பற்றிய பின்னர் இடம் பெற்ற மிக மோசமான சண்டை இது என வர்ணிக்கப்படுகின்றது.

கடந்த 3 நாட்களுக்கு முன் ரஷ்யத் தலைவர் அறிவித்த யுத்த நிறுத்தத்துக்கு பலத்த அடியாக இது அமையும் என்று தெரிவிக்கப்படுகின்றது. [இ-14]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிக முக்கிய அறிவித்தல்

### திறப்பு விழா அழைப்பிதழ்

19ம் இலக்கம் செம்மணி வீதியில் இயங்கிவந்த எமது காரியாலயம் புதிய சம்பந்தர் கிளினிக் ஒழுங்கையில் அமைந்துள்ள 90ம் இலக்க கட்டடத்தில் இன்று 3-05-95 புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

அத்தருணம் சகல அங்கத்தவர்களையும் திறப்பு விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: யாழ். மாவட்ட காரியாலயமும் யாழ். கோட்ட காரியாலயமும் இவ்விடத்தில் இயங்கும் என அறியத் தருகிறோம்.

பொதுச் செயலாளர்
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

(சி/1138)



## சயன்ஸ் சென்ரர்

கரவெட்டி

**A/L 97**

கணித, விஞ்ஞான வகுப்புக்கள்

கணிதம் — திரு. அருளானந்தம் — திங். செவ். வெள். 4 - 6
பௌதிகம் — திரு. கணேஷன் — சனி, ஞாயி 4-15 — 5-15
இரசாயனம் — திரு. மணியம் — சனி, ஞாயி 5-15 — 6-15

ஆரம்பம் **6-5-95** (சனி)

(8516)



## A/L 97
## கலை, வர்த்தகம்

3 பிரிவுகளுக்கும் அனுமதி பெற்ற அனைத்து மாணவர்களும்

**06-05-95** சனி 8-00 மணிக்கு

வகுப்புகளுக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

★ பொருளியல் வகுப்பின் 4ஆவது பிரிவு ஆரம்பிக்கப்படுவதனால் முன்னர் அனுமதி மறுக்கப்பட்ட மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

★ 05-05-95க்கு முன்னர் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

○ புதிய நேர அட்டவணைப்படி வகுப்புக்கள் நடைபெறும்.

○ A/L 95, 96 வகுப்புகள் 06-05-95 அன்று நடைபெறமாட்டா.

**BECON**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(ச/1348)


# பாண் விலையை மறுபரிசீலனை செய்யுமாறு சங்கம் கோருகிறது

## தற்போதைய விலையில் விற்பது நஷ்டம் என தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே. 3

பாணின் விலையை மறுபரிசீலனை செய்யுமாறு யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம் யாழ். அரசாங்க அதிபரிடமும் தமிழ்ழ பொது நிர்வாக சேவையிடமும் கோரிக்கை விடுத்துள்ளது.

விறகுவிலை அதிகரிப்பு, எரிபொருள் விலையில் நாளுக்கு நாள் ஏற்படும் மாற்றங்கள், கொழும்பில் இருந்து பெறப்படும் மூலப் பொருள்களான மைக்ரோ, ஈஸ்ட் போன்றவற்றின் விலை உயர்வு ஆகியவை காரணமாகத் தற்போதைய விலையில் பாணை விற்கமுடியாதிருப்பதாக யாழ் மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கத்தில் சுமார் 160 வெதுப்பகங்கள் அங்கம் வகிக்கின்றன. இவற்றில் 10க்கு மேற்பட்டவை நஷ்டம் காரணமாக மூடப்பட்டு விட்டன. ஏனையவை இக்கட்டான நிலையில் இயங்கி வருகின்றன என்றும் அவர் கூறினார்.

சங்கத்தில் அங்கம் வகிக்கும் வெதுப்பகங்களில் பெரும்பாலானவை மூன்றுக்கு உட்பட்ட மாமூடைகளிலேயே பாண் உற்பத்தி செய்வதாகவும்—

தற்போதைய விலையில் பாண் விற்பனை செய்வதானால் தினமும் மூன்றுக்கு மேற்பட்ட மா மூடைகளில் பாண் தயாரித்தால் மட்டுமே ஓரளவு லாபம் ஈட்ட முடியும் என்றும்— பேச்சாளர் தெரிவித்தார்.

கடந்த செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களுடன் ஒப்பிடுகையில் பாண் விற்பனையில் தற்போது பெருமளவு வீழ்ச்சி இருந்து வருகிறது.

வெளிக் கடைகளில் மா தாராளமாகக் கிடைப்பதும் இதற்கு ஒரு காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## களுத்துறையில் 3 தமிழ் பெண்கள் கைது

களுத்துறை ரயில் நிலையத்தில் 3 தமிழ்ப் பெண்களை களுத்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் களுத்துறையில் வாடகைக்கு தங்கியிருந்து நாளாந்தம் கொழும்பு சென்று வந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ—14)

## பென்ஷன் வவுச்சர்கள்

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்கான மே மாதத்திற்கான பென்ஷன் வவுச்சர்கள் இன்று யாழ். செயலகத்துக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று பருத்தித்துறைக்கு வரும் "நரோமா" கப்பலில் இம்மாதத்துக்கான பென்ஷன் வவுச்சர்கள் எடுத்து வரப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-4]

## ஸ்ரீலங்காவுக்கான அமெரிக்க தூதர்

கலிபோர்னியாவைச் சேர்ந்த ஏ. பீட்டர் பேர்லே ஸ்ரீலங்காவுக்கான புதிய அமெரிக்கத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

1967 முதல் வெளிவிவகார சேவையில் பணியாற்றிவரும் திரு பேர்லே ஏற்கெனவே இந்தியா, நேபாளம், டஹ்றெயின், ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளில் பணிபுரிந்துள்ளார். [இ-க]

## கொழும்புக்கு அஸ்தி

விமானப்படையின் அவ்ரோ விமானம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின் போது உயிரிழந்த 3 பத்திரிகையாளர்களின் அஸ்தி கொழும்பிற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

கொழும்பு கனத்தை மயானத்திற்கு இவர்களின் அஸ்தி கொண்டு வரப்பட்டு ஈமக்கிரியைகள் இன்று மாலை நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

## உயிரிழந்த தளபதிக்கு பதவி உயர்வு

வெள்ளிக் கிழமை தாக்கி அழிக்கப்பட்ட அவ்ரோ விமானத்தில் பயணம் செய்து, கொல்லப்பட்ட வடபிராந்திய விமானப் படைத்தளபதி விங் கொமாண்டர் றொஜர் வீரசிங்கவுக்கு மரணத்துக்குப்பிந்திய பதவி உயர்வாக குறூப் கப்டன் பதவி வழங்கப்பட்டுள்ளது. (ஒ—14)

## உக்ரைன் நாட்டிலிருந்து புலிகளுக்கு வெடி மருந்து

உக்ரைன் நாட்டிலிருந்து 50 தொன் ரி என் ரி வெடி மருந்தையும் பத்துத் தொன் ஆர் டி. எக்ஸ்] வெடி மருந்தையும் விடுதலைப் புலிகள் இயக்கம் கொள்வனவு செய்திருப்பதாக ஆங்கில வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டிருக்கிறது.

இப்பொருள்களின்பாவனை தொடர்பாக பங்களாதேஷ் மற்றும் பர்மா (மியாமர்) நாடுகளின் போலிச் சான்றிதழ்களை சமர்ப்பித்து இவற்றை விடுதலைப்புலிகள் கொள்வனவு செய்திருப்பதாகவும் —

இந்த வெடிப் பொருள்களின் ஒரு பகுதியையேனும் விடுதலைப் புலிகள் கொழும்புக்குக் கொண்டு வந்து சேர்க்கவில்லையானால் அது ஆச்சரியப்பட வைப்பதாக இருக்கும் என்றும் —

அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (உ)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் வலைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி நிலை ஆட்டங்கள் ஆரம்பமாகியுள்ளன.

இன்று பிற்பகல் அத்தியார் இந்துக் கல்லூரி ஆடுகளத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு—

★ 17 வயதுப் பிரிவு:- வேம்படி மகளிர் எதிர் சண்டிலிப்பாய் இந்து ம. வி.

★ 19 வயது:- வேம்படி மகளிர் எதிர் உடுவில் மகளிர் மற்றும் சண்டிலிப்பாய் இந்து ம. வி. எதிர் கொக்குவில் இந்து.

## இந்தியாவிடம்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

அடுத்து தமது நாட்டில் எழுந்துள்ள நெருக்கடி நிலை காரணமாக சில்லா சந்திப்பில் பங்குபற்றாமல் இன்று காலையே கொழும்பு திரும்பி விடுவார் என அறிவிக்கப்பட்டது.

நாட்டின் நெருக்கடி நிலை காரணமாக புதுடில்லி செல்வதை ஜனாதிபதி சந்திரிகா தவிர்க்க விரும்பினார் என்றும் —

ஆனால் "சார்க்" மாநாட்டுக்கு எந்த ஒரு அங்கத்துவ நாட்டின் தலைவர் வராவிட்டாலும் மாநாட்டை நடத்த முடியாது ஒத்தி வைக்க வேண்டும் என்ற பொது விதி காரணமாக — மாநாட்டை நடத்தி முடிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து — புதுடில்லி செல்ல ஜனாதிபதி முடிவு செய்தார் என்றும் —

நேற்று ஜனாதிபதி செயலகம் அறிவித்தது (உ-5 6)

## யாழ். பல்கலைக்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

றவே தாங்கள் கொழும்புக்கு வந்ததாக இவர்கள் தெரிவித்தனர் என்றும் —

ஆனால் அவர்கள் கூறியபடி போரதனைப் பல்கலைக் கழகத்தில் அத்தகைய ரீட்சை ஏதும் நடைபெறவில்லை என்றும் —

விசாரணையின் போது தெரியவந்ததாக பொலிஸார் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

பஸ் நிலையத்தையும் பொது மக்களின் நடமாட்டத்தையும் இந்த எண்மரும் கண்காணித்தவாறு காணப்பட்டனர் என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார் (ஒ-6)

## யுத்த தந்திரோ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அனுராதபுரத்தில் அமைந்திருக்கும்.

வவுனியா, மன்னார், புத்தளம், அனுராதபுரம் மாவட்டங்களில் வரிசைப் படுத்தப்பட்டுள்ள இரண்டாவது டிவிஷன் துருப்புக்களின் பொறுப்பை மேஜர் ஜெனரல் ஜெமுனு குலதுங்க மேற்கொள்வார்.

முன்னாள் புனருத்தாரண தலைமை ஆணையாளராகிய பிரிகேடியர் ஆனந்த வீரசேகர, மேஜர் ஜெனரல் குலதுங்கவின் இடத்தில் இரண்டாவது விசேட படையின் தளபதியாக பொறுப்பேற்பார்.

அடுத்த இராணுவத் தளபதி யார் என்று அரசியல் தலைவர்கள் விவாதித்துக் கொண்டிருக்கும் வேளையில் இந்த மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இதே வேளையில் ராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வா மே 30 ஆம் திகதி 55 வயதை பூர்த்தி அடைவதால் இராணுவத்தின் இரண்டாவது உயர் அதிகாரியான மேஜர் ஜெனரல் லக்கி அல்கம இதற்கு 3 நாட்களின் பின்னர் ஓய்வு வயதை அடைவார்.

மேஜர் ஜெனரல் லக்கி அல்கம ஜனாதிபதியின் [illegible] ஓய்வு விண்ணப்ப[illegible] பவில்லை என அறியவருகிறது. (ஒ-க)

## முடிவை...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

இழைக்கவில்லை, அரசாங்கம் தான் தவறிழைத்தது என்பது தான் உங்கள் கருத்தா என்று கேட்கப்பட்ட போது —

தமது தீர்மானங்களை விரைவில் அமுலாக்காது விட்டதில் அரசு தவறு இழைத்ததாக விடுதலைப் புலிகள் கருதுகிறார்கள்.

அவர்களின் பார்வையில் அது சரி இதிலிருந்து நாங்கள் ஒரு படிப்பினையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகள் செயற்படும் முறையை உணர்ந்து கொள்ள வேண்டும் — என்று பதிலளித்தார்.

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையிலிருந்தும், மோதல் தவிர்ப்பிலிருந்தும் விலகியமை குறித்து தாம் ஏமாற்றம் அடைந்துள்ளதாகக் கூறிய அவர் —

எந்தச் சமாதான நடவடிக்கையிலும் ஏற்றமும், இறக்கமும் இருந்தே தீரும் என்பதால் தாம் விரக்தி அடையவில்லை என்று கூறினார்.

விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் நடைபெற்ற நான்காம் கட்டப் பேச்சுவார்த்தையில், அரசாங்கத் தரப்புப் பிரதி[illegible] [illegible] (அ-க)

## விடுதலைப் புலிக...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் வைத்திருக்கும் ஏவுகணையால் இலங்கை விமானப்படை மிகப்பெரும் இழப்புகளை அடைந்துள்ளது வடக்கில் தமிழ்ப் பகுதிகளில் உள்ள பாதுகாப்புப் படையினருக்கு சகல வினியோகங்களும் விமான மார்க்கமாகவே மேற்கொள்ளப்படுவதால் விடுதலைப்புலிகள் இயக்கம் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை பெற்றுக்கொண்டுள்ளமை வடக்கிலுள்ள படையினருக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

இந்த படையினருக்கு வினியோகத்தில் ஏற்படும் முட்டுக்கட்டைகள் விடுதலைப் புலிகளுடன் போராடும் சக்தியை இழக்கச் செய்துவிடும். இத்தகைய நிலைமை ஜனாதிபதி சந்திரிகாவுக்கு தமிழ் மக்களுடன் சமாதான உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கும் தடையாக அமையும்

புலிகளின் கையில் இந்த ஏவுகணை இருப்பது இலங்கை விமானப்படை நடவடிக்கைகளுக்கு மாத்திரமன்றி இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் கூட சிவில் விமானப் போக்குவரத்து சேவைக்கு பேராபத்தாக அமையலாம்.

இலங்கை ஜனாதிபதி புதுடில்லியில் சார்க் உச்சி மாநாட்டுக்கு விஜயம் செய்திருப்பது இந்தகைய ஆலோசனைகளை ஆரம்பிப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கிறது.

இவ்விதம் புலிகளின் கை ஓங்குவதால் ஜனாதிபதி சந்திரிகா போன்ற மிதவாத தலைவர் ஒருவரினால் சமஷ்டித் தீர்வு ஒன்றை காண்பதற்கு தடையாக இருக்கும் — என்று ரைம்ஸ் ஓவ் இந்தியா தெரிவித்துள்ளது. (ஒ-4)

## யுத்த...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ளது.

இதேவேளை முன்னர் இடைநிறுத்தப்பட்டிருந்த சுமார் ஆயிரம்கோடி ரூபா செலவிலான ஆயுதக்கொள்வனவை மீளத் தொடங்க அரசு முடிவு செய்திருப்பதாக "ராவய" சிங்கள இதழ் தெரிவித்துள்ளது. [ஒ-4]


**SHAMROCK**
J/CHUNDIKULI
**ENGLISH**

✶ Language:- O/L & yr. 10
✶ Literature:- A/L 97 & O/L

MR. K. JEYAKUMAR

**A/L 97** புவியியல்

ஆரம்பம்:- SAT **06.5.95**

Mr. M. இக்னேசியஸ் B.A. [Hons]
[புவியியல் சிறப்பு]

[36500]


## மரண அறிவித்தல்கள்

### அந்தோனி தாவீது (டேவிட்)

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் அந்தோனி தாவீது (டேவிட் - ஸ்கந்தவரோதய கல்லூரி முன்னாள் ஆசிரியர்) நேற்று 2-5-95 அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி தா. வரோணிக்கம்மாவின் அன்புக் கணவரும், திருமதி அருட்பிரகாசம் ஆன்ற பேக்கா (இத்தாலி), அன்ரன்குமார் (பிரான்ஸ்), மரீனாராணி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி 94 A/L பிரிவு), ஈடிட்டயானா (ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆண்டு 8 மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், செ. அருட்பிரகாசத்தின் (இத்தாலி) மாமனாரும், ஆக்ஸ்ரனின் (இத்தாலி) அன்புப் பேரனும், காலஞ்சென்ற திருமதி அம்புறோஸ் மற்றும் திருமதி யேய்ஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (3-5-95) புதன்கிழமை காலை 9 மணிக்கு புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தா. வரோணிக்கம்மா
(மனைவி)

புனித அந்தோனியார் வீதி,
சுன்னாகம்.

(36495)

### மயில்வாகனம் கோபாலகிருஷ்ணன்

(ஓய்வுபெற்ற வரிமதிப்பீட்டு திணைக்கள உத்தியோகத்தர்)

மயில்வாகனம் கோபாலகிருஷ்ணன் (ஓய்வுபெற்ற வரி மதிப்பீட்டு திணைக்கள உத்தியோகத்தர்) நேற்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற மயில்வாகனம் - மாணிக்கரத்தினம் தம்பதியினரின் அன்பு மகனும், ரோகிணியின் அருமைக் கணவரும், காலஞ்சென்ற குமாரசாமி, மற்றும் தர்மாம்பிகை தம்பதியினரின் மருமகனும், கமலாதேவி (கனடா), தர்மகிருஷ்ணன் (வவுனியா) யமுனாதேவி (கனடா), நந்தபாலன் (கனடா), ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் அருந்தவநாதன் (கனடா), சறோஜினிதேவி (வவுனியா), விஜயலக்ஷ்மி புஷ்பராணி கலவனை செயோன் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற சற்குணசெயோன், காலஞ்சென்ற ஜெயகுணசெயோன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற கமலேஸ்வரன் மற்றும் மகாலக்ஷ்மி (அவுஸ்திரேலியா), திலைநாதன் பாலசௌந்தரி ஆகியோரின் சகலனும், பத்மகுமார் (கனடா), தவக்குமார் (கனடா), கிருஷ்ணகுமார் (கனடா), சுரேஸ்குமார் [கனடா], இந்திரகுமார் (கனடா), காலஞ்சென்ற கிரீடி. மற்றும் சயந்தவி (கனடா) ஷிரானி கனடா), மிபானி (கனடா), ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜெகதா, துஷிதா மிதுன், சந்திரமோகன், ஈசன், முகுந்தன் அகிலன், சுதன், தர்ஷிகா, பிரஷன்கர், லோஜஷன்கர் ஜனகன், லியோசன், துவாரகன், முரளிதரன் ஆகியோரின் அருமைப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (4-5-95) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பானிப்பாய் அர்ச். அன்னம்மாள் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்லி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வி. சந்தராமி
(சகோதரர்)

(36501)

### கார்த்திகேசு கணபதிப்பிள்ளை

[வர்த்தகர் சுன்னாகம்]

புங்குடுதீவு 8 ஆம் வட்டாரம் மடத்துவெளியைச் சேர்ந்தவரும், தற்போது 370, கஸ்தூரியார் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான கார்த்திகேசு கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்றுக் காலமானார்.

இவர் நவமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - மாரிமுத்துவின் அன்பு மகனும், காலஞ்சென்ற நமசிவாயம் - நாகம்மாவின் அன்புமருமகனும், ரதிதேவி [புங். நயி- ப. நோ. கூ. சங்கம்], உமாதேவி [ரூபி], நவதாசன் [ஜேர்மனி], விஜிதாதேவி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், முன்னாள் வர்த்தகர்களான அம்பலவாணர், சின்னத்துரை, ஐயபிள்ளை, காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி, பூரணம், அன்னம்மா, மற்றும் மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கணேசமூர்த்தி (கனடா], சோமசுந்தரி, கமலாம்பிகை, சண்முகநாதன் [வர்த்தகர், சுன்னாகம்], சோமசுந்தரம் [சுவிஸ்] ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. நவமணி
[மனைவி]

370, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

[36502]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 29/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 03 – 05 – 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org